


நமது அரசனும் சக்கரவர்த்தியுமாகிய

ஐந்தாம் ஜார்ஜ் மன்னன்

NEW CENTURY TAMIL STORY READER

# THIRD READER



மூன்றாவது

# கதா வாசக புஸ்தகம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
29 APR 1914
MADRAS.

BY

T. A. RAJARUTHNAM PILLAI

CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA

THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA

MADRAS, ALLAHABAD, CALCUTTA AND COLOMBO

1914

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS
1914

77698

P31-3
X14

# முகவுரை

தமிழ் கற்கும் மாணாக்கர் அப்பாஷையை விரும்பிக் கற்று மிகவும் விருத்தியடைய வேண்டுமென்னும் நோக்கத்தோடு இத்தொடர்ப புஸ்தகங்களை நவீனமாய் இயற்றி வெளியிட்டிருக்கின்றோம். இவற்றிலுள்ள பாடங்கள் பெரும்பாலும் கதைகளாயிருப்பதால் இத்தொடர்ப் புஸ்தகங்களுக்குக் கதா வாசக புஸ்தகத் தொடர் என்று பெயரிடப்பட்டிருக்கின்றது. இவை முற்றிலும் புதிய முறையாய் எழுதப்பட்டவை. இவற்றில் பெரும்பாலும் மாணாக்கர் மனதை வசீகரித்து நல்லறிவுறுத்தும் நீதிக்கதைகளும், சிற்சில பொருட்பாடங்களும், சுகாதாரம், பூமி சாஸ்திரம், இதிகாசம், ராஜாங்கமுறை முதலியவற்றைக்குறித்த விஷயங்களும், சுலபமாயும் உல்லாசமாயும் பாடக்கூடிய இசைப்பாட்டுக்களும், இத்தேசத்துச் சிறுவர் சிறுமிகள் சாதாரணமாய் வீடுகளில் பாடி ஆடும் போஷணசாலைப் பாடல்கள் (Nursery Rhymes) என்று சொல்லப்படுகிற விநோத பாடல்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய பாட புஸ்தகங்களில், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, மூதுரை, நல்வழி முதலிய நீதிநூல்களிலுள்ள பாடல்களை உபயோகிப்பதே பெருவழக்காயினும் நாம் அம்முறையைப் பெரிதும் கைக்கொள்ளாது இயன்றமட்டும் நீதிக்கதைகளைப் பாடல்களாக அமைத்துள்ளோம். ஆயினும் நம் தமிழ்நாட்டில் மேற்கூறிய ஔவை பாடல் முதலிய நூல்கள் மிகவும் சிரேஷ்டமாய் எண்ணப்படுதலானும், அவை சிறந்த நீதியைப் புகட்டுதலானும் அவ்வழக்கத்தை முற்றிலும் நீக்காது மாணாக்கர் சக்திக்கேற்றபடி அவற்றிலிருந்தும் சில பாடல்களைச் சேர்த்துள்ளோம்.

ராஜ விசுவாசம் நம்மனோரிடத்தில் இருக்கவேண்டிய விசேஷ லக்ஷணம். அது வளருவதற்கேற்ற விதையைப் பாலியர் மனதில் விதைத்தால்தான் தக்க காலத்தில் பயன் தருமெனக் கருதி, ராஜ விசுவாசத்தை யுண்டாக்கத்தக்க சில கதைகளையும் ராஜ வாழ்த்துப் பாடல்களையும் இடையிடையே அமைத்திருக்கின்றோம்.

இஃதன்றி நமது ராஜாவுடைய சாயல் மாணுக்கருடைய மனதில் நன்ருய்ப் பதியும்வண்ணம் அவர் ராஜரீகவுடைதரித்து ராஜ சின்னங்கள் துலங்க, கிரீடதாரியாய் நிற்கும் பாவனையாய்ப் பல வர்ணந் தீட்டப்பெற்ற ஓர் அழகிய படத்தை இத்தொடர்ப் பாட புஸ்தகங்கள் ஒவ்வொன்றின் முகப்பிலும் சேர்த்துள்ளேம். ஈசன் இறைவனைக் காக்க.

ஏறக்குறைய இத்தொடர்ப் புஸ்தகங்களில் காணப்படும் படங்கள் யாவும் இவைக்கென்றே புதிதாய்ச் செய்யப்பட்டவை. சில பாடங்களுக்கு இரண்டு படங்கள் அமைத்துள்ளேம். ஆகையால் உபாத்தியாயர் ஒரு பாடத்தை ஆரம்பிக்க முன்னரே பிள்ளைகள் படத்தைப் பார்க்கும்படி செய்து கேள்விகளின் மூலமாய்ப் பாடத்திலுள்ள விஷயங்களைப் பிள்ளைகள் தம் வாயால் சொல்லும்படி செய்தல்வேண்டும். பிறகு பாடத்தை விபரமாய் உபாத்தியாயர் விளக்கிக் காட்டலாகும். பாடங்களில் எடுத்தாளப்பட்டுள்ள கதைகள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் சிறந்த நீதியைக் கற்பிப்பதால் இத்தொடர்ப் புஸ்தகங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் நீதி கதா சங்கிரகம் என்றலும் பொருந்தும். பெரியோரைப் பேணுதல், பெற்ருேரைக் கனம்பண்ணுதல், பொய்யாமை, இன்சொல்மொழிதல், தீமைசெய்யாமை, அன்புடைமை, ஜீவகாருண்யம், ராஜபக்தி, சகோதர ஐக்யம், முயற்சியின் பயன் முதலிய விஷயங்கள் கதா ரூபமாகத் தெளிவாய் விளக்கப்பட்டிருக்கின்றன. மிக்க விரைவாய் எழுதி அச்சிட்டு வெளிவரும் இப்புஸ்தகங்களில் குறைவுகள் இருப்பது இயல்பே. ஆயினும்,

'குற்றம் களைந்து குணங்கொள்வ தெஞ்ஞான்றும்
கற்றறிந் தோர்தங் கடன்'

ஆகலின், கற்றுணர்ந்த பெரியோர் நல்வரவு கூறி அங்கிகரிப்பரென்றெதிர்பார்க்கின்ருேம்.

T. A. R.

# அட்டவணை—CONTENTS


பாடம். பக்கம்.

1. கிழவனும் கழுதையும். The Old Man and the Ass ... 1
2. காக்கையும் நரியும். The Crow and the Fox ... ... 4
3. ஔவையின் வாழ்த்துதல். The Blessings of Auvei, the Poetess ... ... ... ... ... 7
4. கழுதையும் நிழலும். The Ass and the Shadow ... 9
5. மோசம் நாசம். Deceit brings ruin ... ... 11
6. யானை கண்ட குருடர். The Blind Men and the Elephant ... ... ... ... ... ... 14
7. காணமற்போன மோதிரம். The Lost Ring ... 15
8. சாதாரண பழமொழிகள். Common Proverbs ... 18
9. சுகத்தைப் பேணும் முறை. How to preserve health. 19
10. வைக்கோலின்மேல் படுத்திருந்த நாய். The Dog in the Manger ... ... ... ... ... 21
11. பத்துப் பொற் பிரமாணங்கள். Ten Golden Rules ... 24
12. ஔவை பாடல். Poetry ... ... ... ... 25
13. வழக்காடுதல் The Evils of Lawsuit ... ... 26
14. சிறுவரும் குருவிக்கூடும். The Boys and the Bird's Nest ... ... ... ... ... ... 29
15. மாதுரு பத்தி. Duty to the Mother ... ... 31
16. குதிரை The Horse ... ... ... ... 33
17. நற்புத்தி புகட்டிய பிரபு. The Noble man that taught a good lesson ... ... ... ... ... 36
18. சிங்கமும் எருதுகளும். The Lion and the Oxen ... 39
19. ஔவை பாடல். Poetry ... ... ... ... 42
20. இரண்டு தேனீக்கள். The Two Bees ... ... 43

| பாடம். | | பக்கம். |
|---|---|---|
| 21. | அரசன் வேண்டுமென்ற தவளைகள். The Frogs that wanted a King ... ... ... ... ... | 45 |
| 22. | அரசிறை. Taxes ... ... ... ... ... | 47 |
| 23. | எழாம் எட்வர்ட் அரசர். King Edward the Seventh | 50 |
| 24. | மாடாட்டியும் பெருமாள் மாடும். The Bull-player and the Perumal Bull ... ... ... ... | 53 |
| 25. | கிளிப்பிள்ளையால் மோசம்போனது. Deceived by a Parrot ... ... ... ... ... ... | 55 |
| 26. | பொருளாசையை நீக்கல். Abandoning desire for Wealth ... ... ... ... ... ... | 58 |
| 27. | சிறுவனும் மைனக் குஞ்சுகளும். The Little Boy and the Mina Birds ... ... ... ... | 60 |
| 28. | புலி. The Tiger ... ... ... ... ... | 64 |
| 29. | சங்கீத வித்துவானுக்குச் சூடுபோட்டது. The Singer Branded ... ... ... ... ... | 67 |
| 30. | தொத்து நோய்களைத் தடுப்பதெப்படி? How to prevent Contagious Diseases? ... ... ... ... | 69 |
| 31. | அக்பர் சக்கரவர்த்தி. Emperor Akbar ... ... | 72 |
| 32. | ஈஸ்வர பக்தி. Poetry ... ... ... ... | 75 |
| 33. | மதுரை. The City of Madura ... ... ... | 76 |
| 34. | பருத்திச் செடி. Cotton Tree ... ... ... | 79 |
| 35. | மூடத்தனம் மிகுந்த காக்கை. Foolish Crow ... ... | 82 |
| 36 | நீல நரி. Blue Jackal ... ... ... ... | 85 |
| 37. | ஈசன் இறைவனைக் காக்க. God Save the King ... | 88 |

மூன்றாவது

# கதா வாசக புஸ்தகம்



## 1. கிழவனும் கழுதையும்

1. ஒருநாள் ஒரு கிழவனும், பத்து வயதுடைய அவன் மகனும் ஒரு கழுதையை ஓட்டிக்கொண்டு அடுத்த கிராமத்திலுள்ள சந்தைக்குச் சென்றார்கள். கிரா

மங்களில் வாரத்திற்கொருமுறை சந்தை கூடுவதால் இவர்கள் அக்கழுதையைச் சந்தையில் விற்றுவிட்டுத் தங்களுக்கு வேண்டிய சாமான்களை வாங்கிக்கொள்ளும்படி அங்கே போனார்கள்.

2. போகும்போது வழியில் ஒருவன் அவர்களைச் சந்தித்து 'இது என்ன புதுமை? இரண்டுபேர் கொழுத்த கழுதை யொன்றை நடத்திக்கொண்டு கால்நடையாய் நடந்து போகிறார்களே. இதைப்போல் மூடத்தனமுண்டா? கிழவன் இக்கழுதையின்மேல் ஏறிப்போதலாகாதா?' என்றான்.

3. இதைக்கேட்ட கிழவன் உடனே கழுதைமேலேறிக் கொண்டு பையனை நடத்திக்கொண்டு போனான். இப்படியே கிழவன் கழுதைமேலும் பையன் நடந்தும் சிறிது தூரம் சென்றனர். அப்பொழுது அவ்வழியாய்ப் போய்க் கொண்டிருந்த ஓர் வர்த்தகனும் அவன் மனைவியும் அவர்களைப் பார்த்து 'ஐயோ! இக்கிழவனுடைய நெஞ்சு என்ன, கல்லா? ஐயோ! பாவம்! அறியாத பாலகனை வெயிலில் நடக்கவிட்டுத் தான் உல்லாசமாய்ச் சவாரிசெய்துகொண்டு போகிறானே; இவனல்லவோ அன்புடைய அப்பன்' என்று பரிகாசம் பண்ணினார்கள்.

4. கிழவன் அதைக் கேட்டவுடன் கழுதையிலிருந்து கீழே யிறங்கிச் சிறுவனைக் கழுதைமே லேற்றிக்கொண்டு பின்னும் கொஞ்சத்தூரம் சென்றான். அப்பால், கிணற்றில் ஜலம் மொண்டுகொண்டு எதிரே வந்த சில ஸ்திரீகள் அவர்களைப் பார்த்து 'இச்சிறுவன் மகா சமர்த்தன்; தள்ளாத கிழவனை வெயிலில் நடக்கவிட்டுத் தான் கழுதைமே லேறிக்கொண்டான்; இவனல்லவோ அன்புடைய புத்திரன்' என்றார்கள்.

5. இதைக்கேட்டுக் கிழவன் 'நாமிருவருமேறிக்கொண்டால் ஒருவருமொன்றும் சொல்லமாட்டார்கள்' என்று நினைத்துக்கொண்டு தானும் கழுதைமேலேறிக்கொண்டான். இப்படி இருவரும் ஒரு கழுதைமேலேறிக்கொண்டு பின்னும் கொஞ்சத்தூரம் செல்லவே வேறொருவன் எதிர்ப்பட்டு அவனை நோக்கி: 'ஐயா, இக்கழுதை உம்முடையதுதானா?' என்றான். அதற்குக் கிழவன் 'ஆம், என்னுடையதுதான்; ஏன் அப்படிக் கேட்கிறீர்?' என்றான். அதற்கு அவன் 'உம்முடைய செய்கையைப் பார்த்தால் கழுதை உம்முடையதுபோல் காணப்படவில்லை; வாயில்லா ஜீவனையிற்றே! நீங்கள் இருவர் அதின்மேலேறிக்கொண்டு அதை இம்சைபண்ணுவது தர்மமா? அது உங்களைச் சுமப்பதைவிட நீங்கள் அதைச் சுமந்துபோவது நலமாயிருக்கும்' என்று சொல்லிவிட்டுத் தன் வழியே போனான்.

6. இதைக்கேட்டு அவர்களிருவரும் கழுதையைவிட்டிறங்கி, அதின் நான்கு கால்களையும் ஒன்றாகக் கட்டினார்கள். பிறகு அக்கால்கள் மத்தியில் ஒரு கழியை மாட்டித் தோள்மேல் தூக்கிக்கொண்டு வீதி மார்க்கமாய் ஓர் வாராவதியின் மேலாகச் சென்றார்கள்.

7. அப்பொழுது ஜனங்கள் கூட்டங்கூடி 'இதென்ன விநோதம்! இப்படியும் மூடருண்டா? கழுதைமேல் ஏறிப்போவதை விட்டு, கழுதையைத் தோள்மேல் சுமந்துகொண்டும் போவார்களா?' என்று கைகொட்டிச் சிரித்துக் கூச்சலிட்டார்கள். இதைக்கேட்டுக் கழுதை துள்ளிக் கட்டிய கயிற்றை யறுத்துக்கொண்டு வாராவதியின் கீழிருந்த ஆற்றில் விழுந்து இறந்தது. அவ்வேழைகள் எல்லாருக்கும் ஒப்ப நடக்கப் பிரயாசப்பட்டதினால் கழுதையை இழக்க வேண்டியதாயிற்று. கிழவனும் அவன் மகனும் துக்கத்தோடு வீட்டிற்குத் திரும்பினார்கள்.

8. நாம் இவ்வுலகத்தில் நடந்துகொள்ளும் விதம் பலருக்கு வெறுப்பாயிருக்கலாம். அதைப்பற்றி நாம் கவனிக்காது நமது மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் நடந்துகொள்ளவேண்டும். ஒருவன் எல்லாருக்கும் ஒப்ப நடக்கப் பிரயாசப்படுவது வீண்.



## 2. காக்கையும் நரியும்

1. ஆணும் பெண்ணுமாக இரண்டு காக்கைகள் ஒரு பெரிய மரத்திற் கூடுகட்டிக்கொண்டு நெடுநாள் வாழ்ந் திருந்தன. அம்மரத்தின் பொந்தில் ஒரு கருநாகமும் வாசம் செய்துகொண்டிருந்தது. பெண்காக்கை இடும் முட்டைகளையெல்லாம் அந்த நாகம் திருட்டுத்தனமாய்க் குடித்துக்கொண்டே வந்தது. இந்தச் சங்கதி காக்கை களுக்கு நெடுநாள் தெரியாமலே இருந்தது.

2. பிறகு ஒருநாள் அவைகளுக்குச் சமாச்சாரம் தெரியவந்தது. அப்பொழுது 'ஆண்காக்கை விசனப்பட்டுத் தனக்குச் சிநேகமாயிருந்த ஓர் நரியிடத்திற்குப் போய் நடந்த சங்கதிகளைச் சொல்லி முட்டைகளைக் காப்பாற்றுவதற்கு என்ன உபாயம் செய்யலாம்?' என்று கேட்டது.

3. நரி மிகவும் விசனப்பட்டு 'சிநேகிதா! நான் என்ன உபாயம் சொல்லுவேன். பாம்போடு சண்டைசெய்ய எனக்குச் சக்தியில்லை. ஆயினும் நான் சொல்வதைக் கேட்டு அப்படிச் செய்வாயானல் நீ சுகமடைவாய்' என்றது.

4. காக்கை மிகவும் ஆவலோடு 'நண்பனே! அது என்ன, சொல்; தவருமல் அப்படியே செய்வேன்' என்றது.

5. நரி காக்கையைப் பார்த்து 'அதோ தெரிகிறதே ஓர் அழகிய கட்டடம், அதுதான் நமது ராஜனுடைய அரமனை. அங்கே நமது ராஜகுமாரத்தி குளிக்கிற மஞ்சன சாலையிருக்கிறது. நீ அந்த மஞ்சனசாலைச் சுவரின்மேல் உட்கார்ந்திரு. ராஜகுமாரத்தி குளிக்கும்போது ஆபரணங்களைக் கழற்றிவைப்பாள். அவ்வாபரணங்களில் ஒன்றை நீ எடுத்துவந்து பாம்பு வாசம்செய்யும் மரப்பொந்தில் போட்டுவிடு' என்றது. நரி அப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டது.

6. பிறகு காக்கை மஞ்சனசாலைக்குச் சென்று சமயம் பார்த்துக்கொண்டிருந்தது. ராஜகுமாரத்தி வந்து ஆபரணங்களைக் கழற்றிவைத்துவிட்டு ஸ்நானம் செய்துகொண்டிருந்தாள். காக்கை அவளுடைய முத்துமாலையை எடுத்துக்கொண்டு பறந்துபோயிற்று.

7. ராஜகுமாரத்தி அதுகண்டு கூச்சலிட்டுக்கொண்டு வெளியே ஓடிவரவே, அவளுடைய வேலைக்காரர் சங்கதி தெரிந்துகொண்டு காக்கையைத் தொடர்ந்து சென்றார்கள்.

காக்கை முத்துமாலையைப் பாம்பு வாசம்செய்துகொண்டிருந்த மரப்பொந்தில் போட்டுவிட்டது.



8. உடனே ராஜனுடைய வேலைக்காரர் மரப்பொந்தைப் பிளக்கத் தலைப்பட்டார்கள். பாம்பு மிக்க கோபத்தோடு சீறிக்கொண்டு வெளியே வந்தது. அவர்கள் அதைத் தடியாலடித்துக் கொன்றுவிட்டு முத்துமாலையை எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள்.

9. காக்கை நரியிடத்திற்குச் சென்று 'சிநேகிதா! நீ சொன்ன உபாயம் பலித்தது; அதற்காக உனக்கு நன்றி சொல்ல வந்தேன்' என்று சொல்லி நரியிடத்தில் விடை பெற்றுக்கொண்டு போய்விட்டது.

10. பிறகு அக்காக்கைகளிரண்டும் அம்மரத்தில் நெடுநாள் சுகமாய் வாழ்ந்துகொண்டிருந்தன.



## 3 ஔவையின் வாழ்த்துதல்

1. முன்னொரு காலத்தில் சோழதேசத்திற்குக் குலோத்துங்கசோழன் ராஜனாயிருந்தான். அவனுக்கு மகுடாபிஷேகம் நடந்தபோது, பற்பல வித்துவான்கள் கவிபாடி அவனை வாழ்த்தினார்கள். ராஜனுடைய சபையிலுள்ளோர் மிக்க சந்தோஷமடைந்தார்கள்.

2. அச்சமயத்தில் ஔவை என்னும் கல்விச் செல்வி அவ்விடம் வந்தாள். அங்கிருந்த வித்துவான்கள் அவளை நோக்கி 'அம்மா! நாம் கவிபாடி நமது ராஜனை வாழ்த்துதல் செய்துவிட்டோம். நீ மாத்திரம் வாழ்த்தாது சும்மாவிருப்பதற்குக் காரணமென்ன ?' என்று கேட்டார்கள்.

3. அப்பொழுது ஔவை 'வரப்புயர' என்று சொல்லிவிட்டுப் பேசாமலிருந்துவிட்டாள். அதுகேட்டு அவர்

கள் அவள் சொன்னது என்னவென்று தெரிந்துகொள்ளாமல் மறுபடியும் 'தாயே! என்ன சும்மாவிருக்கிறீர்களே' என்றார்கள். ஔவை முன் சொன்னபடியே 'வரப்புயர' என்று மறுபடியும் சொன்னாள்.

4. அவர்கள் ஔவை சொன்னதின் பொருளை அறியாமல் மறுபடியும் அவளைத் தொந்தரவு செய்தார்கள். அப்பொழுது அவள் 'நான் இரண்டுமுறை வாழ்த்தியும் நீங்கள் தெரிந்துகொள்ளவில்லையே; இது என்ன அதிசயம்?' என்றாள்.

5. வித்துவான்கள் அதெப்படியென்று கேட்க, ஔவை:

வரப்புயர நீருயரும்
நீருயர நெல்லுயரும்
நெல்லுயரக் குடியுயரும்
குடியுயரக் கோலுயரும்
கோலுயரக் கோனுயர்வான்

என்று அனைவருக்கும் கேட்கும்படி தெளிவாய்ச் சொன்னாள்.

6. அப்பொழுது சபையிலுள்ள சாதாரண ஜனங்களில் சிலர் 'என்ன அம்மா, நமக்கு அர்த்தமாகவில்லையே' என்றார்கள்.

7. அப்பொழுது ஔவை, 'ஐயமாரே! நான் சொல்லுகிறேன் கேளுங்கள்: வரப்பு உயரமாயிருந்தால் வயலில் நீர் அதிகமாக வரும்; அப்பொழுது நெல்லு வளரும்; நெல்லு வளர்ந்தால் குடிகளுக்கு க்ஷேமமுண்டு; குடிகள் க்ஷேமப்பட்டால் ராஜ்ஜியம் செழிக்கும்; ராஜ்ஜியம் செழிக்கவே அரசன் சிறப்படைவான்' என்றாள்.

8. இதைக்கேட்ட அனைவரும் அவளுடைய புத்தி சாதுரியத்தை மெச்சினார்கள். ராஜனும் மிக மகிழ்ந்து

அவளுக்குச் சிறந்த பரிசு கொடுத்து அனுப்பும்படி கட்டளையிட்டான்.

9. மேலே சொல்லப்பட்ட கதையிலிருந்து பல சிறந்த நீதிகளை நாம் கற்றுக்கொள்ளலாம். கற்றவர்களுக்கு எங்கே சென்றாலும் மதிப்புண்டு. ஔவை பெண்பிள்ளையேயானாலும் கல்வியறிவுடையவளாகையால் வித்துவான்கள் அவளை மதித்து ராஜனை வாழ்த்தும்படி கேட்டார்கள். நாம் கல்வியறிவுடையவர்களாயிருந்தால் எல்லாரும் நம்மை மதிப்பார்கள். ஆகையால் எவ்வித கஷ்டமடைந்தாலும் கல்வியையே நாடு.



## 4. கழுதையும் நிழலும்

1. வடக்கே டில்லிக்குச் சமீபத்திலுள்ள ஒரு பட்டணத்தில் ஜயராம் என்ற ஒரு வர்த்தகனிருந்தான். அவன் கிராமங்களில் போய் வர்த்தகம்செய்வது வழக்கம். கால்

நடையாய்ப் போவது கஷ்டமாயிருந்தபடியால் அவன் ஒரு குடியானவனிடத்தில் கழுதையொன்றை வாடகைக்கு வாங்கிக்கொண்டான்.

2. ஐயரும் அக்கழுதையின்மேலேறிப் பிரயாணப்பட்டான். கழுதைக்குச் சொந்தக்காரனும் கழுதையோடு கூடச் சென்றான். கொஞ்சத்தூரம் சென்றபின் வெயில் அதிகமாயிருந்தபடியால் ஐயரும் சிறிதுநேரம் தங்கி இளைப்பாறலாமென்று எண்ணினான். வழியோரத்தில் மரங்களிருக்கும்; அவற்றின் நிழலில் ஒதுங்கலாமென்று அவன் எங்கும் தேடிப் பார்த்தான். ஒரு மரமும் காணப்படவில்லை.

3. பிறகு கழுதையை வெயிலில் நிறுத்திவிட்டு அவன் அக்கழுதையின் நிழலில் உட்கார்ந்தான். அக்கழுதையின் நிழலோ மிகவும் சிறிதாயிருந்தமையால் ஐயரும் மாத்திரமொதுங்குவதற்குப் போதியதாயிருந்தது.

4. கழுதைக்குச் சொந்தக்காரனும் வெயில் சகிக்கமாட்டாமல் அக்கழுதையின் நிழலில் உட்காரப்போனான். ஐயரும் இருவரும் உட்காரப் போதியளவு இடமில்லாமையால் உட்காரக்கூடாதென்றான். கழுதைக்காரன், கழுதைக்குத் தான் சொந்தக்காரனாயிருப்பதினால் தனக்கு நிழலில் உரித்துண்டென்று வாதாடினான்.

5. ஐயரும் தான் கழுதையை வாடகைக்கு வாங்கினபடியால் நிழல் தனக்குச் சொந்தம் என்றான். இப்படியே வாக்குவாதம் செய்து சண்டையிட்டு ஒருவரையொருவர் அடித்துக்கொண்டார்கள். இந்தச் சந்தடியில் கழுதை ஓட்டம் பிடித்தது.

6. கழுதைக்குச்சொந்தக்காரன் நியாயாதிபதியிடத்திற்போய்ப் பிரியாது செய்துகொண்டான். நியாயாதிபதி

இருவரையும் வரவழைத்து விசாரித்தான். ஜயரும், 'ஐயனே! நான் இவனிடத்தில் கழுதையை வாடகைக்கு வாங்கினது வாஸ்தவந்தான். வழியில் நான் கழுதை நிழலில் உட்கார்ந்தேன். இவன் அந்நிழல் தன்னுடையதென்று மூடத்தனமாய் வாதாடினதால் கழுதையை இழக்க நேரிட்டது. அதற்கு நான் உத்தரவாதியல்ல' என்றான்.

நியாயாதிபதி ஜயருக்கு அனுகூலமாகத் தீர்ப்புச் செய்து அவர்கள் இருவரையும் அனுப்பிவிட்டான்.

## 5. மோசம் நாசம்

1. துஷ்டபுத்தி, சுபுத்தி என்று பெயருடைய இரண்டு செட்டிப்பிள்ளைகள் பணம் சம்பாதிப்பதற்காக வெளியூருக்குப் போனார்கள். அங்கே சுபுத்திக்கு ஒரு பணப்புதையல் அகப்பட்டது. அவன் அதை மற்றவனுக்கும் சொல்லிச் சந்தோஷப்பட்டான். பிறகு துஷ்டபுத்தி சுபுத்தியை நோக்கி 'நாம் இந்தத் திரவியத்தை எடுத்துக்கொண்டு போனால் நம்மைத் திருடர் அடித்துப் பிடுங்கிக்கொள்ளுவார்கள். ஆகையால் கொஞ்சம் பணத்தை எடுத்துக் கொண்டு மீதியை இங்கேயே புதைத்து வைத்துவிட்டுப் போகலாமென்றான்.

2. சுபுத்தி அதற்குடன்பட்டான். ஆகையால் அவர்கள் சிறிது திரவியத்தைமாத்திரம் எடுத்துக்கொண்டு மீதியை அங்கேயே ஒரு மரத்தடியில் புதைத்து வைத்து விட்டுத் தங்கள் ஊருக்குப்போய்ப் பழையபடி மிகவும் சிநேகிதமாகவே வாழ்ந்துகொண்டிருந்தார்கள்.

3. ஒருநாள் துஷ்டபுத்தி தனியாக அம்மரத்தண்டை போய் அங்கே புதைத்துவைத்திருந்த பணம் முழுவதையும்

எடுத்துக்கொண்டு வந்துவிட்டான். இந்தச் சங்கதி சுபுத்திக்குத் தெரியாது. சுபுத்தி துஷ்டபுத்தி யிடத்திற் போய் 'நாம் பணம் புதைத்துவைத்து வெகுநாளாயிற்றே; வா, நாம் போய் அதை எடுத்துவரலாம்' என்றான்.

4. அப்படியே இருவரும் அவ்விடத்திற்குப் போய்த் தோண்டிப் பார்த்தார்கள். பணம் அங்கே காணப்படவில்லை. உடனே சுபுத்திக்குச் சந்தேகமுண்டாயிற்று. 'நாம் இங்கே பணத்தைப் புதைத்த சங்கதி துஷ்டபுத்திக் கொழிய வேறு யாருக்கும் தெரியாது. ஆகையால் அவனே பணத்தைத் திருடியிருக்கவேண்டும்' என்று நிச்சயித்துக் கொண்டான்.

5. பிறகு அவன் துஷ்டபுத்தி யிடத்திற் சென்று 'இங்கு புதைத்துவைத்த பணத்தை நீயே திருடினாய்; அதைக் கொடு' என்றான். அவன் இல்லையென இருவரும் நியாயாதிபதியிடத்தில் சென்றார்கள். துஷ்டபுத்தி தான் பணத்தைத் திருடவில்லையென்றும், தனக்குச் சாட்சியிருக்கிறதென்றும் சொன்னான்.

6. நியாயாதிபதி 'நீ உன் சாட்சியை நாளைக்குக் கொண்டுவா' என்றான். துஷ்டபுத்தி உடனே வீட்டுக்குப் போய்த் தகப்பனைப் பார்த்து: 'அப்பா! உன்னுடைய ஒரு வார்த்தையால் எனக்கு ஆயிரம் ரூபாய் கிடைக்கும்' என்றான். கிழவன்: மகனே! அதெப்படி?' என்றான். மகன்: 'அப்பா! நான் உன்னை ஒரு மரப்பொந்தில் வைக்கிறேன். நியாயாதிபதி வந்து விசாரிக்கும்போது, புதையலைச் சுபுத்தியே கொண்டுபோனானென்று அங்கிருந்தபடியே சொல்லிவிடு' என்றான்.

7. கிழவன் அப்படியே போய் மரப்பொந்தில் உட்கார்ந்துகொண்டான். துஷ்டபுத்தி நியாயாதிபதியிடத்தில்



போய்த் தனக்குச் சாட்சி அந்த மரமென்ருன். நியாயாதிபதி மரத்தின் கிட்டப்போய் இங்கு புதைத்துவைத்த பணத்தை யார் கொண்டுபோனுன்? என்ருன். உடனே 'சுபுத்தியே கொண்டுபோனுன்' என்று மரப்பொந்திலிருந்து ஒரு சத்தம் பிறந்தது.

8. 'ஓஹோ: இதென்ன புதுமை! மரம் எப்படிப் பேசும். மரப்பொந்தில் யாரோ இருந்துகொண்டு பேசுகிருப்போல் காண்கிறது' என்று நியாயாதிபதி சந்தேகப்பட்டான். 'யார், மரப்பொந்திலிருப்பது' என்று கேட்டுப் பார்த்தான். ஒரு பதிலுமில்லை.

9. அப்பால் மரத்தைக்கொளுத்திவிடும்படி நியாயாதிபதி உத்தரவு செய்தான். உடனே சேவுகர் மரத்திற்கு நெருப்பு வைத்தார்கள். மரம் தீப்பற்றி எரிய ஆரம்பித்தது. மரப்பொந்திலிருந்த கிழவன் பாதி வேகும்வரையில் பல்லைக் கடித்துக்கொண்டிருந்துவிட்டுக் கதறிக்கொண்டு வெளியே வந்து விழுந்தான்.

10. நியாயாதிபதி கிழவனை விசாரித்து உண்மை தெரிந்துகொண்டபின் துஷ்டபுத்தியைத் தண்டித்து, அவன் எடுத்துக்கொண்டுபோன பணத்தைத் திரும்பியும் சுபுத்திக்குக் கொடுக்கும்படி திட்டஞ்செய்தான்.



## 6. யானை கண்ட குருடர்

1. குருடர் நால்வர் சேர்ந்து கொண்டு
கொல்லும் யானையைப் பார்க்கச் சென்றார்.

2. பாகன் யானையை முன் நிறுத்திப்
பாரீர் நீங்க ளென வுரைத்தான்.

3. ஒருவன் காலைத் தொட்டுப் பார்த்து
உரல்போ லிருக்குது யானை யென்ருன்.

4. மற்ருெருகுருடன் துதிக்கை தொட்டு
மரவுலக் கையிந்த யானை யென்ருன்.

5. பின்னு மொருவன் வால் தொட்டுப்
பெருக்கிடும் துடைப்பமிவ் யானை யென்ருன்.

6. நான்காம் குருடன் செவி தொட்டு
நாடிய யானை முறமென் ருன்.

7. இப்படி யிவர்கள் பிதற்றிக் கொண்டு
ஏகமாய்ச் சண்டை யிட்டன ரே.

8. வழியே போனோ ரிது கேட்டு
மதியில் லோர்நீர் பிழைசெய் தீர்.

9. நீங்கள் சொல்வது சரி யன்று
நிசமாய் யானை வேரு கும்.

10. எனவே யவர்கள் வெட்க முற்று
ஏகினர் தம்வழி துன்புற் றே.

## 7. காணமற்போன மோதிரம்।

1. ஒரு பெரிய பட்டணத்தில் ஒரு இடைச்சி வாசம் செய்துகொண்டிருந்தாள். அவள் அதிகாலையிலெழுந்து வீடுவீடாய்ச் சென்று தயிர் விற்று ஜீவனம் செய்துவந்தாள். விதவையாயிருந்ததினுல் அவளே கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கவேண்டியதாயிருந்தது.

2. அவள் பரம ஏழை. ஒரு எருமையும் கன்றுமே தவிர வேறு ஆஸ்தி அவளுக்கில்லை. அவள் கையிலே



இரண்டணு விலையுள்ள ஒரு பித்தளை மோதிரம் மாத்திர மிருந்தது.

3. அவள் வீடுவீடாய்த் தயிர் விற்றுக்கொண்டு போகும்போது அவளுக்குத் தெரியாமலே அந்த மோதிரம் வீதியில் எங்கேயோ விழுந்துபோயிற்று. அதை அவள் கவனியாது வெகு தூரம்போய், ஒரு வீட்டில் தயிர் வார்க்கும்போது கையில் மோதிரமில்லையென்று கண்டாள்.

4. உடனே அவள் அவ்விடத்தில் உட்கார்ந்து 'ஐயோ! எனக்குள்ள நகை அந்த மோதிரமொன்றுதானே. அதுவும் இல்லாமற்போயிற்றே. ஈசா, இதுவா என் கதி!' என்று சொல்லி வருத்தப்பட்டுக்கொண்டிருந்தாள்.

5. அந்தப் பட்டணத்து ராஜன் தேக சௌக்கியத்தினிமித்தம் அதிகாலையில் பிரதிதினமும் கால்நடையாய்

உலாவிவருவது வழக்கம். அப்படியே அவன் வீதி மார்க்கமாய் வரும்போது இந்தப் பித்தளை மோதிரத்தைக் கண்டெடுத்தான்.

6. அந்த மோதிரத்தை அவன் எடுத்துக்கொண்டு கொஞ்சத்தூரம் போனவுடன் ஒரு ஸ்திரீ வீதியோரமாய் உட்கார்ந்து அழுதுகொண்டிருப்பதைக் கண்டான். ராஜா அவள் கிட்டப்போய் 'அம்மா நீ அழுவதற்குக் காரணமென்ன?' என்று விசாரித்தான்.

7. அவள் 'ஐயனே! நான் தயிர்விற்று ஜீவனம் செய்யும் ஓரிடைச்சி. நான் மிகவும் ஏழை. என் கையில் ஒரு மோதிரம் மாத்திரமிருந்தது. அதைத்தவிர எனக்கு வேறே சொத்து கிடையாது. அது வீதியில் எங்கேயோ விழுந்துவிட்டது. அதற்காக வருத்தப்படுகிறேன்' என்றாள்.

8. அரசன் சிரித்து, 'என்ன, அற்ப விலையுள்ள ஒரு மோதிரத்திற்காகவா அழுகிறாய்' என்றான். ஆம், 'பூனைக்குக் கொண்டாட்டம், எலிக்குத் திண்டாட்டம்' என்பது போல ஏழையாகிய என் கஷ்டம் எனக்குத் தெரியும். கோடீஸ்வரனாகிய தங்களுக்குத் தெரியுமா? என்றாள்.

9. ராஜன் உடனே வைரமிழைத்த ஓர் மோதிரத்தை அவளுக்குக் காண்பித்து, 'இதுவா உன்னுடைய மோதிரம்' என்றான். அவள் அதை வாங்கிப் பார்த்துவிட்டு 'இல்லை, இது என்னுடையதல்ல' என்றாள்.

10. ராஜன் திரும்ப இரத்தினம் பதித்த ஓர் மோதிரத்தைக் காண்பித்து 'இது உன்னுடையதா?' என்றான். அவள் அல்லவென்றாள். அப்பால் அரசன் பொன்னால் செய்த மோதிரமொன்றைக் காண்பித்து 'இது உன்னுடையதா?' என்றான். இடைச்சி 'அதுவுமல்ல' என்றாள்.

11. பிறகு அவன் வெள்ளி மோதிரமொன்றைக் காட்டி 'உன் மோதிரம் இதுவா?' என்றான். அவள் 'அதுவுமல்ல' என்றாள். கடைசியாய்த் தான் கண்டெடுத்த பித்தளை மோதிரத்தைக் காண்பித்து 'இது உன்னுடைய மோதிரமா, பார்?' என்றான். அவள் அதைத் திருப்பித் திருப்பிப் பார்த்து 'ஆம், இதுதான் என்னுடைய மோதிரம்; இதைக் கண்டெடுத்துக் கொடுத்ததற்காக நான் மிகவும் நன்றிகூறுகிறேன்' என்றாள்.

12. ராஜன் அவளுடையநேர்மையை மெச்சி எல்லா மோதிரங்களையும் அவளுக்கே கொடுத்தான். இடைச்சி அரசனுக்கு நன்றிகூறி மிக்க சந்தோஷத்தோடு தன் வீட்டிற்குச் சென்றாள்.

## 8. சாதாரண பழமொழிகள்

1. எறும்பூரக் கல் குழியும்.
2. எட்டுச் சுரைக்காய் கறிக்குதவுமா?
3. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.
4. கடுகு சிறிதானாலும் காரம் போகுமா?
5. கடும் சிநேகம் கண்ணைக் கெடுக்கும்.
6. கரும்பு தின்னக் கைக்கூலி வேண்டுமா?
7. கள்ளமனம் காடோடும்.
8. காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு.
9. ஐந்து பணத்திற்குக் குதிரையும் வேண்டும் ஆறு தாண்டிப் பாயவும் வேண்டும்.
10. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.

11. கிணற்றுத் தவளைக்கு நாட்டுவளப்பமேன்?
12. குடிக்கிறது கூழ் கொப்பளிக்கிறது பன்னீரா?
13. கும்பிடப்போன தெய்வம் குறுக்கிட்டாற்போல்.
14. கூழுக்கு மாங்காய் தோற்குமா?
15. கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமா?
16. கோல் எடுத்த பிள்ளை குருட்டுப்பிள்ளை.
17. சாண் ஏற முழம் சறுக்கினாற்போல்.
18. சுவரில்லாமல் சித்திரமெழுதலாமா?
19. கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை.
20. ஊர்க்குருவிமேல் ராமபாணம் தொடுக்கலாமா?
21. துள்ளுகிற மாடு பொதி சுமக்கும்.
22. தலையிருக்க வால் ஆடுமா?
23. தொட்டிலிற் பழக்கம் சுடுகாடுமட்டும்.
24. பணமென்றால் பிணமும் வாயைத் திறக்கும்.

## 9. சுகத்தைப் பேணும் முறை

1. நமது சுகத்தைப் பேணிக்கொள்வது நம்மனைவர் பேரிலும் விழுந்த பெருங்கடமையா யிருக்கின்றது. தேக சௌக்கியமே எல்லாவற்றிற்கும் காரணம். அது இல்லாவிட்டால் வேறு என்னவிருந்தும் பிரயோசனமில்லை. மிக்க செல்வராயிருக்கிற சிலர் தீரா நோயால் வருந்துவதை நாம் காண்கின்றோம். அவர்கள் நிலைமை எவ்வளவு பரிதாபமானது?

2. சுகமில்லாவிட்டால் நாம் வேலை செய்வதும், அறிவில் தேறுவதும், மற்றவர்களுக்கு நன்மை செய்தலும்

கூடாது. ஆகையால் நாம் சுகத்தைச் செல்வத்திலும் மேலானதாக மதிக்கவேண்டும். சுகத்தைப் பேணுவதற் கேற்றமுறைகள் எவையென்று சிறிது விசாரிப்போம்.

3. முதலாவது, சுத்த ஆகாயம் சுகத்திற்கு முக்கிய மான சாதனம். ஆகாயம் சுத்தமாயிருக்கவேண்டுமானுல் நாம் நமது வீடுவாசல்களையும், நாம் நடமாடும் தோட்டம் துரவுகளையும் சுத்தமாய் வைத்திருக்கவேண்டும். நாம் படுத்துக்கொள்ளும் அறைகள் காற்றோட்டமுள்ளவைகளா யிருத்தல்வேண்டும்.

4. இரண்டாவது, நமது தேகமும் உடுப்பும் சுத்தமா யிருத்தல்வேண்டும். பிரதிதினமும் உன் உடம்பை நன் ருய்த் தேய்த்து ஸ்நானம்செய். 'தெய்வ பக்திக்கு அடுத்தது சுத்தி' என்பதை மறவாதே. உன் நகச்சந்து களிலும் விரல்களுக்கிடையிலும் சேர்ந்திருக்கும் அழுக்கை அகற்றிவிடு. நித்தமும் பல்விளக்கி, தலைசீவி சுத்தவஸ் திரம் தரித்துக்கொள்ளல்வேண்டும். உன் வஸ்திரத்தை எப்பொழுதும் தோய்த்துச் சுத்தியாய் வைத்துக்கொள். கந்தையானுலும் கசக்கி உடுக்கவேண்டும்.

5. மூன்றாவது, நாம் சோம்பலாயிருத்தல் கூடாது. ஒரு கெடியாரம் ஓடாவிட்டால் சீக்கிரத்தில் துருப்பிடித் துக் கெட்டுப்போகும். அதுபோலவே நாம் நமது அவய வங்களை ஆட்டி அசைத்து வேலைசெய்யாவிட்டால் நமக்கு அசௌக்கியமுண்டாகும். ஆகையால் நாம் நமக்கும் பிற ருக்கும் பிரயோசனமாகும்படி கிரமமாய் வேலைசெய்ய வேண்டும்.

6. நான்காவது, நாம் தக்கபடி தேக அப்பியாசம் செய்தல்வேண்டும். பிரதிதினமும் கஷ்டப்பட்டு வேலை செய் கிறவர்களுக்கு அதுவே தேக அப்பியாசமாகிறது. மற்றவர்

கள், பந்தாடுதல், குதிரைச் சவாரிசெய்தல், ஓடுதல் முதலிய அப்பியாசங்களைச் செய்தல்வேண்டும்.

7. ஐந்தாவது, நாம் சுகத்திற்கடுத்த போஜனத்தைச் சாப்பிடவேண்டும். பருப்பு, நெய், பால், தயிர், பழம் முதலியவை சுகத்திற்கேற்றவை. அழுகின அல்லது நன்றாய்ப் பழுக்காத பழங்களையும், புளித்துக் கெட்டுப்போன பதார்த்தங்களையும், சாராயம், கள்ளு முதலிய மதுவர்க்கங்களையும் சாப்பிடுதல் சுகத்திற்குக் கெடுதியை யுண்டாக்கும். குடிவெறிக்கு நாம் கொஞ்சமும் இடங்கொடுத்தல் கூடாது. நமக்கு எவ்வளவு ஆகாரம் வேண்டுமோ அவ்வளவு ஆகாரத்தையே நாம் சாப்பிடவேண்டும். மிதமிஞ்சிச் சாப்பிடுதல் அஜீரணத்தை உண்டாக்கும்.

8. ஆறாவது, நாம் செய்யும் வேலைக்குத்தக்கபடி இளைப்பாறவேண்டும். இது சுகத்திற்கு மிகுந்த அனுகூலமாயிருக்கிறது. நித்திரைதான் அவ்வித இளைப்பாறுதலைத் தருகிறது. நித்திரை செய்வதற்கு ஏற்ற காலம் இராத்திரிதான். நாம் பிரதிதினமும் ஆறு அல்லது ஏழு மணிநேரம் நித்திரை செய்யவேண்டும். மேற்கூறியவைகளை நாம் கவனித்து நடந்தால் சுகமுடையவர்களாயிருப்போம்.

## 10. வைக்கோலின்மேல் படுத்திருந்த நாய்

1. ஒரு இடையன் அநேக பசுமாடுகளை வைத்துக்கொண்டு அவைகள் கொடுக்கும் பாலை விற்று ஜீவனம் செய்துவந்தான். வீட்டிற்குக் காவலாகவும், மாடுகளை மேய்க்கப் போகும்போது அவனுக்குத் துணையாயிருப்பதற்கும் தன் வீட்டில் ஒரு நாயையும் வளர்த்தான்.



2. அந்த நாய்க்கோ பகலில் அதிக வேலையொன்று மில்லை. இடையன் மாடுகளை மேய்க்கப் போகும்போது கூடப்போகும். ஆனால் அவன் திரும்பி வருவதற்கு முன்னமே அது வீட்டிற்கு வந்துவிடும். வீட்டிலே அகப்படு மாகாரத்தைச் சாப்பிட்டபின் அது மாட்டுத்தொழுவத்திற்குப்போய் மாடுகளுக்காகப் போடப்பட்டிருக்கும் வைக்கோலின்மேல் படுத்துக்கொள்வது வழக்கம்.

3. ஒருநாள் அந்த நாய் வழக்கப்பிரகாரம் இடையனோடு போய்த் திரும்பிவந்து சாப்பிட்டபின் வைக்கோலின் மேல் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தது. சாயங்காலம் மாடுகளெல்லாம் மேய்ந்துவிட்டு வீட்டிற்கு வந்தன. வந்தவுடன் இடையன் மாடுகளுக்கெல்லாம் தண்ணீர்காட்டித் தொழுவத்தில் கொண்டுபோய்க் கட்டினான்.

4. அப்பொழுது மாடுகளிலொன்று அங்கே போடப்பட்டிருந்த வைக்கோலைத் தின்னப்போயிற்று. அப்பொழுது வைக்கோலின்மேல் படுத்திருந்த நாய், வள்! வள்! என்று குலைத்து 'நீ இந்த வைக்கோலைத் தின்ன நான் விட

மாட்டேன்' என்றது. அப்பொழுது மாடு, 'ஓ, நாயே! இந்த வைக்கோலினால் உனக்கென்ன பிரயோசனம்? எனக்கு அது ஆகாரமாயிருக்கிறபடியால் என்னைத் தின்ன விடு' என்று சொல்லிற்று.

5. நாய் திரும்பியும் குலைத்து மாட்டைக் கடிக்கப் போயிற்று. இந்தச் சந்தடியைக் கேட்டு இடையன் ஓடி வந்தான். மாடு வைக்கோலைத் தின்னப்போவதையும், நாய் குலைத்துத் தடுப்பதையும் கண்டான். உடனே அவனுக்குக் கோபம் மூண்டது. 'சீ! இந்த நாயின் மூடத்தனமென்ன? வைக்கோல் மாட்டிற்கு ஆகாரமாயிற்றே. மாடுகளுக்காகவே நான் வைக்கோலை அங்கே போட்டுவைத்தேன். அப்படியிருக்க இந்த நாய் மாட்டைத் தின்னவிடமாட்டேனென்கிறது' என்று சொல்லி ஒரு தடியையெடுத்து நாயை நன்றாயடித்தான். நாய் கத்திக்கொண்டு ஓட்டம் பிடித்தது.

6. சில மனிதர் இந்த நாயைப்போலவே இருக்கிறார்கள். ஒரு காரியத்தைத் தாங்கள் செய்கிறதுமில்லை; செய்யக்கூடியவர்களைச் செய்யவிடுகிறதுமில்லை. இவர்களைத் தான் வைக்கோலின்மேல் படுத்திருக்கும் நாய்க்குச் சமானமானவர்களென்று சொல்வது.

7. பிள்ளைகளே! நீங்கள் அப்படி யிருத்தல்கூடாது. உங்களுக்குப் பிரயோசனமில்லாத வஸ்து மற்றவர்களுக்கு உபயோகப்படுமாயின் அதை அவர்கள் உபயோகப்படுத்த இடங்கொடுங்கள். உதாரணமாக, ஒரு பிள்ளையிடத்திலிருக்கும் பாட புஸ்தகத்தை அவன் படிக்காத சமயத்தில் மற்றொரு பிள்ளை படிப்பதற்காகக் கேட்டால் தடையில்லாமல் உடனே கொடுக்கவேண்டும். அப்பொழுது அப்பிள்ளை உத்தமனென்று பேரெடுப்பான். 'வைக்கோலின் மேல் படுத்திருக்கும் நாயைப்போலிராதே.'

## 11. பத்துப் பொற் பிரமாணங்கள்

கீழே சொல்லப்படும் பத்துப் பிரமாணங்களும் மிகவும் விலேயேறப்பெற்றவை. இவைகள் பொன்னைப் போல் மிகவும் அருமையானவை. ஆகையால் இவைகளுக்குப் பொற் பிரமாணங்கள் என்று பெயரிட்டிருக்கின்ருேம். பிள்ளைகளே, நீங்கள் இவைகளைக் கவனித்து இவற்றின்படி நடந்தால் சுகப்படுவீர்கள்:—

1. இன்றைக்குச் செய்யவேண்டிய வேலையை நாளைக்குச் செய்யலாமென்று பின் போடாதே. இன்றைக்கிருந்தாரை நாளைக்கிருப்பரென்று எண்ணவோ திடமில்லையே.

2. நன்ருய் யோசியாமல் ஒரு காரியத்தையும் செய்ய ஆரம்பியாதே. 'எண்ணித் துணிக கருமம்' என்று எல்லோராலும் புகழ்ந்து கொண்டாடப்படும் திருவள்ளுவர் கூறியிருக்கின்ருர்.

3. கடன் வாங்கிச் செலவுசெய்யாதே. இந்தப் பிரமாணத்தை நீ கைக்கொண்டு நடப்பாயாளுல் உனக்கு ஒருபோதும் கஷ்டம் நேரிடாது. கடன்படுவோன் கலக்கமடைவான். 'கடன் பட்டார் நெஞ்சம்போலக் கலங்கினுன் இலங்கை வேந்தன்' என்று ஓர் வித்துவான் கூறியிருக்கின்ருர்.

4. ஒருபோதும் கோபம் கொள்ளாதே. கோபம் வந்துவிட்டால் நீ பேசுவதற்குமுன் ஒன்றுமுதல் பத்து வரையிலும் எண்ணு. அதிக கோபம் வந்துவிட்டால் நூறுவரையிலும் எண்ணு. கோபமே கொலைகட்கெல்லாம் காரணமென்பதை நீ கேட்டதில்லையா?

5. ஒரு வஸ்து உனக்கு அவசியமில்லாதிருந்தும் விலை சரசமா யிருக்கிறதென்பதற்காக அதை வாங்காதே. இதிளுல் அழிந்தோர் அநேகர்.

6. ஒருபோதும் பெருமைகொள்ளாதே. அது உன்னை வீழ்த்திவிடும். ஆகையால் அதை உன் இருதயத்திலிருந்து முற்றிலும் நீக்கிவிடு.

7. 'நான் என்ன செய்வேன்; எனக்கொன்றுமில்லையே!' என்று சொல்லி சும்மாவிருந்து வருத்தப்படாதே. கஷ்டப்பட்டு வேலைசெய். கருப்பையிலிருக்கும் குழந்தைக்கும் கல்லுக்குள்ளிருக்கும் தேரைக்கும் விருப்புற்று உணவளிக்கும் ஈசன் உன்னைக் காப்பாற்றாது விடுவானா?

8. மதுபானம் ஒருபோதும் செய்யாதே. இது உன்னையும் உன் மனைவி மக்களையும் தரித்திரராக்கும். மதுவுண்டார் மதிகெட்டாரல்லவா?

9. சத்தியமென்னும் கண்டசரத்தை எப்பொழுதும் அணிந்துகொள். அது உன்னை உத்தமனாக்கும்.

10. எப்பொழுதும் மிதமாய்ப் போஜனம்செய். மித போஜனம் சுக சாதனமல்லவா? அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகும். ஆகையால் மட்டாய்ப் போஜனம் செய்வதே தகுதி.

## 12. ஔவை பாடல்

1. அடுத்து முயன்றாலு மாகு நாளன்றி
எடுத்த கருமங்க ளாகா—தொடுத்த
உருவத்தா னீண்ட வுயர்மரங்க ளெல்லாம்
பருவத்தா லன்றிப் பழா.

2. நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாங்கே பொசியுமாம்—தொல்லுலகில்
நல்லா ரொருவ ருளரே லவர்பொருட்
டெல்லார்க்கும் பெய்யு மழை.

3. மடல் பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல் சிறிய ரென்றிருக்க வேண்டா—கடல்பெரிது
மண்ணீரு மாகா ததனருகே சிற்றூறல்
உண்ணீரு மாகி விடும்.

4. கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானு மதுவாகப் பாவித்துத்—தானுந்தன்
பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி.

5. வேங்கை வரிப்புலிக்குத் தீர்த்த விடகாரி
ஆங்கதனுக் காகார மானாற்போல்—பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த வுபகாரம்
கல்லின்மே லிட்ட கலம்.

6. அடக்க முடையா ரறிவிலரென் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டாம்—மடைத்தலையில்
ஓடுமீ னோட வுறுமீன் வருமளவும்
வாடி யிருக்குமாங் கொக்கு.

## 13. வழக்காடுதல்

1. பிள்ளைகளே நாம் அடுத்த பக்கத்தில் காட்டியிருக்கும் படத்தைச் சற்றுக் கவனியுங்கள். ஒரு பசுமாடு நின்றுகொண்டிருக்கிறது. ஒருவன் வாலைப் பிடித்திழுக்கிறான். இன்னொருவன் தலையைப் பிடித்திழுக்கிறான். வாலைப் பிடித்திழுப்பவன் மாடு தன்னுடைய தென்கிறான். தலையைப் பிடித்திழுப்பவனோ மாடு தன்னுடைய தென்கிறான்.

2. இப்படி இவர்கள் இழுபட்டுக்கொண்டிருப்பது கேவலம் ஒரு மாட்டுக்காகத்தான். அந்த மாட்டைத் தன்னுடைய தாக்கிக்கொண்டால் அந்த மாட்டிலிருந்துண்



டாகும் பாலைத்தா னுண்ணலாமென்று அவர்களில் ஒவ்வொருவனும் எண்ணுகிறுன்.

3. இன்னும் அந்தப் படத்தைச் சற்றே கவனியுங்கள். அவர்கள் தலையிலும் வாலிலும் பிடித்திழுக்கும் மாட்டில் ஒருவன் பால் கறக்கிறுன். அவன் அப்படிப் பாலைக் கறப்பது அவர்களுக்குத் தெரியாது. அவர்கள் சண்டையிடுவதில் புலனைச் செலுத்திக்கொண்டிருக்கிறபடியால் இவன் பால் கறப்பதை அவர்கள் கவனிக்கவில்லை.

4. வழக்காடுவதும் இப்படித்தானிருக்கிறது. ஏதாவது ஒரு சொத்து விஷயமாய் இருவர் வியாச்சியம் தொடங்குகிறுர்கள். அச்சொத்து ஆயிரம் ரூபா விலையுள்ளதென்று வைத்துக்கொள்வோம். இருவரும் அபரிமிதமாய்ப் பணம் செலவுசெய்கிறுர்கள். சொத்து என்னுடையது என்னுடையது என்று இருவரும் வாதாடுகிறுர்கள்.

5. இனி, படத்திலே காட்டியிருக்கிறபடி இருவர் மாட்டைப்பிடித்திழுக்க ஒருவன் பாலைக் கறந்துகொள்வதுபோல, வழக்கு நடக்கும்போது இடையில், கோர்ட்டுச்செலவு,

வைக்கீல்ச்செலவு, குமாஸ்தாச்செலவு முதலியவைகளுக்காக இருகட்சியாரும் அதிக பணம் செலவு செய்கிறார்கள்.

6. வழக்கு இரண்டு மூன்று வருஷம் நடக்கிறது. இதற்குள் கட்சிக்காரர் வேண்டியமட்டும் பணத்தைச் செலவு செய்துவிடுகிறார்கள். கடைசியில் வியாச்சியம் முடிவாகும்போது, இருவரில் ஒருவன் ஜயிக்கிறான்; ஐயோ! மற்றவன் நஷ்டமடைகிறான். நஷ்டமடைந்தவன் ஜயித்தவனுடைய செலவுகளையும் கட்டிக் கொடுக்கவேண்டியதாகிறது. இப்படியே அவன் நாசமடைகிறான். இதற்காகவே கல்விச்செல்வியாகிய ஔவை 'வாதாடி வழக்குரைத்துத் திரியவேண்டாம்' என்றாள்.

7. ஐயோ! நமது தேசத்தில் வழக்காடிக் கெட்ட குடும்பங்கள் எத்தனை? எத்தனை ஜமீன்களும் ராஜ குடும்பங்களும் இதினால் முழுகிப்போயின. ஒரு சொத்தைக்குறித்து வியாச்சியம் நேரிடும்போது பஞ்சாயத்தார் மூலமாய் அதைத் தீர்மானம் செய்துகொள்ளல் எவ்வளவு நல்லது.

8. வழக்காடும் குணம் நமது தேசத்தவரில் மிகவும் விசேஷமாய்க் காணப்படுகிறது. இதை நாம் முற்றிலும் நீக்கி நமது விவகாரங்களை நமக்குள்ளேயே செலவில்லாமல் தீர்மானம் செய்துகொள்ளப் பிரயாசப்படவேண்டும். அப்பொழுதுதான் நமது தேசம் க்ஷேமப்படும்.

9. சிறு பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் படிக்கும்பொழுதே பேனா பல்பம் முதலியவைகளுக்காகச் சண்டையிட்டு உபாத்தியாயரிடத்தில் பிரியாது செய்துகொள்ளுகிறார்கள். இந்த வழக்கம் நாளுக்குநாள் விருத்தியாகி கடைசியில் வழக்காடும் குணம் அப்பிள்ளைகளில் ஏற்படுகிறது. ஆகையால் உபாத்திமார் இக்குணத்தை முளையிலே களையவேண்டும்.



## 14. சிறுவரும் குருவிக்கூடும்

1. வீரப்பன், முத்தன் என்று இரண்டு சகோதரரிருந்தார்கள். வீரப்பனுக்கு உத்தேசம் ஏழுவயதும் முத்தனுக்கு ஐந்துவயது மிருக்கும். வீரப்பன் மிகவும் நல்ல குணமுடைய பையன். எவரிடத்திலும் மரியாதையாய்ப் பேசுவான். சகல ஜீவபிராணிகளிடத்தும் மிக்க அன்புடையவன்.

2. முத்தன் துஷ்டனல்ல; ஆனால் வீரப்பனுக்கு இளையவனானபடியால் சற்றே விளையாட்டுச் சிந்தையுடையவன்; குறைந்த அறிவுடையவன்; ஆகையால் அடிக்கடி தப்பிதம் செய்வதுண்டு.

3. தேக அப்பியாசத்திற்காக அவர்கள் பிரதிதினமும் உலாவப் போகவேண்டுமென்று தகப்பனார் உத்தரவு செய்

திருந்தார். அப்படியே அவர்களிருவரும் ஒருநாள் உலா வப்போனார்கள். போகும்போது முத்தன் வேலியின்மேல் ஒரு குருவிக்கூட்டைக் கண்டான்.

4. கூட்டிலே தாய்ப்பட்சி உட்கார்ந்து குஞ்சுகளுக்கு இரை கொடுத்துக்கொண்டிருந்தது. அவர்களைக் கண்ட வுடன் அது ஓடிப்போயிற்று. அவர்கள் கிட்டப்போய்ப் பார்த்தபோது மூன்று குஞ்சுகள் கூட்டிலிருப்பதைக் கண் டார்கள்.

5. முத்தன் அக்குஞ்சுகளை எடுத்து வீட்டுக்குக் கொண்டுபோய் வளர்க்கலா மென்றான். வீரப்பன் அதைத் தடுத்து 'தம்பி! பட்சிகளின் கூடுகளைக் கொள்ளையிடுவது மகா தப்பிதமென்று நமது தகப்பனார் சொல்லவில்லையா? நமது தாயார் எங்களி லன்பாயிருப்பதுபோலவே பட்சிக ளும் குஞ்சுகளிடத்தில் அன்பாயிருக்கின்றன. யாராவது நமது வீட்டிற்குள் வந்து நமது வீட்டிலிருக்கும் சிறு குழந் தையை எடுத்துக்கொண்டுபோவது உனக்குச் சம்மதமா யிருக்குமா?' என்றான்.

6. முத்தன் 'இல்லை, நானும் என் தாய் தகப்பன்மாரும் மிகவும் வருத்தப்படுவோம்' என்றான். அப்படியானால் 'அதோ, பறந்து பறந்து கத்திக்கொண்டிருக்கிற தாய்ப்பட் சிக்கும் அப்படித்தானிருக்கும்; வா, நாம் போகலாம். அக் குருவி வந்து தன் குஞ்சுகளுக்கு இரை கொடுக்கட்டும். மேலும் குஞ்சுகள் வளர்ந்து பக்குவமடையும் வரையில் தாயின் பராமரிப்பிலிருந்தால்தான் க்ஷேமப்படும். ஆகை யால் நாம் அதைத்தொடவும் கூடாது' என்றான். முத் தன், அப்படியே யாகட்டுமென்று சொல்லி அவன் சகோ தரனுடைய ஆலோசனைப்படி நடக்கத் தீர்மானித்தான்.

7. அவர்கள் இப்படிச் சம்பாஷித்துக்கொண்டதை அவர்கள் தகப்பனார் வேலியின் மறுபக்கத்திலிருந்து கேட்

டுக்கொண்டிருந்தார். ஆ, அவருக்குண்டான சந்தோஷம் எவ்வளவு? அவர் தன் பிள்ளைகளைக் கட்டியணைத்து முத்த மிட்டு மிகவும் புகழ்ந்து கொண்டாடினர். நாம் யாதொரு ஜீவபிராணிக்கும் இம்சை செய்யக்கூடாது.

## 15. மாதுரு பத்தி

1. மிக்க பிரசித்திபெற்ற ஒரு தேசத்தை ஆண்டு கொண்டிருந்த ஓர் அரசன் ஒருநாட் சாயங்காலம் தன் அர மனையில் சுகமாய் உட்கார்ந்துகொண்டிருந்தான். அவன் கூப்பிட்டவுடன் வந்து இட்ட வேலையைச் செய்வதற்கு அவ னுடைய வேலைக்காரப் பையன் வாசலில் நிற்பது வழக்கம். அரசன் வேலைக்காரனை வேண்டும்போது மணியடிப்பான். அப்பொழுது பையன் தயாராய் வந்து அரசன் முன் நிற்கவேண்டியது.

2. அன்றையதினம் அரசன் வேலைக்காரப் பையனைக் கூப்பிடுவதற்காக மணியடித்தான்; அவன் வரவில்லை. அரசன் பலமுறை மணியடித்தும் பையன் வரவேயில்லை. அரசனுக்கு ஆச்சரியமுண்டாயிற்று. அவன் எழுந்து போய்ப் பையன் வழக்கமாய்க் காத்திருக்கும் அறைக் கதவைத் திறந்து பார்த்தான். பையன் ஒரு பலகையின் மேல் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தான்.

3. உடனே அரசன் உள்ளே போய் அவனை எழுப்பப் போனன். அப்பொழுது அவனுடைய சட்டைச் சாக்கி லிருந்து தொங்கிக்கொண்டிருந்த ஒரு காகிதத்தைக் கண் டான். அரசன் மெதுவாய் அக்காகிதத்தை எடுத்துப் படித்துப் பார்த்தான். அதில் பின் வருமாறு எழுதியி ருந்தது:—

என் அன்பிற்குரிய மகனே,

நான் இவ்விடம் க்ஷேமம். நீயும் க்ஷேமமாயிருக்கிறு யென்று நீ அனுப்பிய காகிதம் வழியாய் அறிந்து சந்தோஷ மானேன். நீ அனுப்பின ஐம்பது ரூபாயும் கிடைத்தது. என் கஷ்டகாலத்தில் எனக்கு உதவிசெய்யும்பொருட்டு நீ உன் சம்பளத்தில் மீத்து அனுப்பினது எனக்கு மிகவும் சந்தோஷத்தைக் கொடுத்தது. நீ என்றும் சிரஞ்சீவியாய் வாழவேண்டியது. என் குறைவை நீ கவனித்ததினிமித்தம் கடவுள் உன்னை ஆசீர்வதிப்பாராக.

இப்படிக்கு,

உன் அன்புள்ள தாய்,

கண்ணம்மாள்.

4. காகிதத்தைப் படித்துப் பார்த்தவுடன், அது வேலைக்காரனுடைய தாயிடத்திலிருந்துவந்ததென்று அரசன் கண்டான். அப்பால் அவன் தன் அறைக்குட் போய் ஐம்பது ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்துக்கொண்டு வந்து பையனுடைய சட்டைச்சாக்கில் அவனுக்குத் தெரியாமல் வைத்துவிட்டுப் போய்விட்டான்.

5. போய், அரசன் மணியை விரைவாயடித்தான். பையன் துடிதுடித்துக்கொண்டு எழுந்து அரசன் சமுகத்திற்கு ஓடிப்போனுன். அரசன் அவனைப் பார்த்து, 'நீ நன்ருய்த் தூங்கினுயா?' என்ருன். பையன் நடுநடுங்கி, 'அரசே! நான் ஏதோ அஜாக்கிரதையாய்த் தூங்கிவிட்டேன்; மன்னிக்கவேண்டும்' என்ருன்.

6. பிறகு பையன் மனக்கலக்கத்தினுல் தற்செயலாய்த் தன் சட்டைச்சாக்கில் கையைவிட அவன் கைக்கு ஒரு சுருள் தட்டுப்பட்டது. இதென்ன என்று எடுத்துப் பார்த்தான். அது ஐம்பது ரூபாய் நோட்டாயிருந்தது.

7. பையன் அதிக திகிலடைந்து ஒன்றும் செய்வதற்குத் தோன்ருது மரம்போல நின்ருன். அவன் மனம் வருந்தி மௌனமாயிருப்பதை அரசனறிந்து அவனை நோக்கி 'இன்னும் தூக்கம் தெளியவில்லையா? ஏன் பேசாதிருக்கின்ருய்' என்ருன்.

8. உடனே பையன் அரசனைப் பார்த்து 'அரசே! யாரோ என்னைக் கெடுக்கப் பார்க்கிருப்போல் காண்கின்றது. என்னுடைய சட்டைச்சாக்கில் இந்தப் பணம் எப்படி வந்ததென்று எனக்குத் தெரியவில்லை' என்ருன். அதற்கு அரசன் 'நாம் காத்திராத வேளையில் கடவுள் நம்முடைய கஷ்டங்களையறிந்து நமக்கு உதவி செய்வதுண்டு. நீ உன் தாயை நேசித்து அவளை ஆதரித்ததினிமித்தம் நானே அந்தப் பணத்தை உன் சட்டைச்சாக்கில் வைத்தேன். அந்தப் பணத்தை உன் தாய்க்கனுப்பி உன்னையும் அவளையும் நான் காப்பாற்றுவேனென்று அவளுக்கெழுது' என்ருன்.

9. பையன் மிகவும் சந்தோஷத்தோடு அந்தப் பணத்தையும் அவனுடைய தாய்க்கு அனுப்பினுன். அவள் அதை மிக்க சந்தோஷத்தோடு பெற்றுக்கொண்டு அரசனை வாழ்த்தினுள்.

## 16. குதிரை

1. குதிரை மனுஷனுக்கு மிகவும் உபயோகமான மிருகம். அது இப்பொழுது ஏறக்குறைய எல்லாத் தேசங்களிலும் காணப்படுகின்றது. அதின் தலை மிகவும் அழகானது. நெற்றியில் குஞ்சம்போல மயிர் வளர்ந்திருக்கும். குதிரைக்குக் கொம்புகள் இல்லை. அதின் கழுத்து நீண்டிருக்கும். மயிர்கள் மிருதுவாயும் பளபளப்பாயுமிருக்கும்.



2. குதிரைக்குச் சிறந்த பிடர்மயிருண்டு. ஓடும்போது அதின் பிடர்மயிரசைவது மிகவும் அழகாயிருக்கும். குதிரைக்கு மேல்வாயிலும் கீழ்வாயிலும் பற்களுண்டு. அவற்றினுதவியைக்கொண்டு அது தன் ஆகாரத்தை நன்றாய்க் கடித்து மென்று தின்னும். குதிரை மாடுகளைப்போல அசைபோடுவதில்லை.

3. குதிரையின் கால்கள் மெல்லியவை. அவை குதிரைகள் விரைவாய் ஓடுவதற்கேற்றபடி அமைக்கப்பட்டிருக்

கின்றன. அதின் குளம்புகள் மாட்டின் குளம்புகளைப் போல் பிளவுபட்டிராமல் ஒரே துண்டாயிருக்கும். அவை மிகவும் பலமானவை. தரையில் நடக்கும்போதும் ஓடும் போதும் அவை தேய்ந்துபோகாதபடி லாடமடிப்பதுண்டு.

4. வண்டியிழுக்கவும், பாரம் சுமக்கவும், ஏருழவும், பந்தயமோடவும், வேட்டையாடவும் குதிரைகள் உபயோகப்படுகின்றன. யுத்தவீரர் குதிரைகளிலேறிச் சண்டை செய்கிறார்கள்.

5. குதிரை புல்லையும், கொள்ளு, நெல்லு, கடலை முதலிய தானியவகைகளையும் இஷ்டமாய்த் தின்னும். அது தன் ஆகாரத்தைக் கண்டவுடன் தனக்கு வேண்டுமென்பதற்கு அறிகுறியாகக் கனைத்துத் தலையை யசைத்து அவ்வாகாரத்தைக் கொண்டுவரச் சொல்லும்.

6. குதிரைகளில் அநேக ஜாதியுண்டு. எல்லாத்தேசத்துக் குதிரைகளையும்விட அரபிதேசத்துக் குதிரைகளே மிகச் சிறந்தவை. அரேபியர் குதிரைகளைப் பிள்ளையைப் போல் நேசித்து வளர்த்துவருகிறார்கள். குதிரை தன் எஜமானை நன்றாய் அறியும். அது மிகவும் நன்றியறிதலுள்ள மிருகம். பின்வரும் கதை இதைத் திருஷ்டாந்தப்படுத்தும்.

7. பிராஞ்சிய பட்டாள மொன்றில் எக்காளமூதும் சேவக னொருவன் இருந்தான். அவனிடத்தில் சிறந்த போர்க்குதிரை யொன்று இருந்தது. அவன் அதைத் தன் பிராணனைப்போல் நேசித்துவந்தான். அதுவும் அவனுக்கு அமைந்து அதிக சாதுவாக நடந்துவந்தது. அவன் அதின் மேல் ஏறிப்போகும்போது மாத்திரம் அக்குதிரை சந்தோஷம்கொள்ளும். அது தன் எஜமானை யுத்தகளத்தில் அநேக ஆபத்துகளிலிருந்து தப்புவித்ததுண்டு.

8. ஒரு முறை அந்தப் போர்ச்சேவகன் யுத்தகளத்தில் படுகாயப்பட்டு குதிரையிலிருந்து விழுந்துவிட்டான். அவனுடைய குதிரை அங்கிங்கு அசையாமல் அவ்விடத்திலேயே அவனைக் காத்துக்கொண்டு நின்றுவிட்டது. பல நாட் சென்றும் அக்குதிரை அவ்விடத்தைவிட்டு நகரவேயில்லை. பிறகு பலநாட் பொறுத்து அப்போர்ச்சேவகனுடைய பட்டாளத்துச் சேனாபதி யுத்தகளத்திற்குப் போனபோது பட்டினியாய் அக்குதிரை அங்கே நிற்பதைக் கண்டு அதைத் தன்னுடைய கூடாரத்திற்கு நடத்திக்கொண்டு வந்தார். அக்குதிரை அதின் எஜமானிடத்தில் எவ்வளவு அன்பு வைத்திருந்தது பாருங்கள். பிள்ளைகளே! நீங்கள் குதிரைகளிடத்தில் மாத்திரமல்ல, எல்லாப் பிராணிகளிடத்திலும் அன்பாயிருக்கவேண்டும்.

## 17. நற்புத்தி புகட்டிய பிரபு

1. நமது தேசத்திலேயுள்ள ஒரு பெரிய நகரத்தில் உதார குணமுடைய ஒரு பிரபு விருந்தார். அவர் மகா தர்ம சிந்தையுடையவர். யாரிடத்திலும் அன்புபாராட்டியொழுகும் குணமுடையவர். அவர் எப்பொழுதும் ஏதாவது வேலை செய்துகொண்டே யிருப்பார். ஒரு க்ஷண மேனும் வீண்பொழுது போக்குவதில்லை. பிறருக்கு எவ்விதமும் நன்மை செய்யவேண்டுமென்பதே அவருடைய கொள்கை.

2. ஒருநாள் அவர் வீதிவழியாய்ப் போய்க்கொண்டிருக்கும் சமயத்தில் ஒரு ஸ்திரீயும் குழந்தையும் அவருக்கு எதிர்ப்பட்டனர். அவர்கள் அவரைத் தாண்டிச் சிறிது தூரம் சென்றதும் பாதையிலிருந்த ஒரு கிச்சிலிப்பழத்



தோலில் அந்த ஸ்திரீ சறுக்கி விழுந்தாள். உடனே அந்தப் பிரபு ஓடிப்போய் அவளைத் தூக்கிவிட்டு 'அம்மா, ஆபத்து ஒன்றுமில்லை; பயப்படவேண்டாம்' என்று தைரியப் படுத்தி அனுப்பினார்.

3. அந்த அம்மாள் விழுந்ததை வழிப்போக்க ரநேகர் பார்த்தார்கள். ஆனால் ஒருவரும் அவளுக்கு உதவிசெய்ய வில்லை. அவள் விழுவதற்குக் காரணமாயிருந்த அந்தக் கிச்சிலிப்பழத்தோலை அவர்கள் வீதியிலிருந்து எடுத்து விடவுமில்லை. அந்தப் பிரபு அதைக் கவனித்துத் தானே அத்தோலை எடுத்தெறிந்துவிட்டுப் போய்விட்டார்.

4. வீட்டுக்குப் போனவுடன் 'ஐயோ! நமது ஜனங் கள் தங்களைத் தாங்களே நேசிப்பதுதவிர மற்றவர்களுக்கு நன்மை செய்வதைக் காணோமே, என்று வருத்தப்பட்டு

ஒருபாயம் செய்தார். மறுநாள் விடியற்காலம் ஜனங்கள் நடமாடுவதற்குமுன் அவர் அந்த வீதிக்குப்போய் நூறு ரூபாய் நிறைந்த ஒரு பையை வீதியின் நடுவில் வைத்து ஒரு பெரிய கல்லைப் புரட்டி அதின்மேல் நிறுத்திப் பையை மறைத்துவிட்டு வந்துவிட்டார். 'இந்தக் கல்லைப் புரட்டி அப்புறப்படுத்துகிறவர்களுக்கு இந்த நூறு ரூபாய் இனம்' என்று அந்தப் பையில் எழுதப்பட்டிருந்தது.

5. பொழுது உதயமானவுடன் அப்பிரபு அவ்விடத்திற்குச் சற்றுத்தூரமாக ஒரு கடையில் உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருந்தார். அப்பொழுது அவ்வழியாய் வேலைக்குப் போய்க்கொண்டிருந்த ஒருவன் அக்கல்லைப் பார்த்து ஒன்றும் பேசாமல் ஒதுங்கிப் போய்விட்டான். வேறொருவன் அதைப் பார்த்து 'யாரோ மூடர் வழியில் கல்லை வைத்திருக்கிறார்கள்' என்று சொல்லிவிட்டு விலகிப்போய்விட்டான்.

6. அப்பால் நல்ல உடை தரித்துக்கொண்டுபோன ஒருவன் அவ்வழியாய் வந்தான். அவன் எங்கேயோ பார்த்துக்கொண்டுபோனதால் கல் தடக்கிக் கீழே விழுந்து எழுந்து கல்லை வீதியில் வைத்தவனைத் திட்டிக்கொண்டு போய்விட்டான். இப்படியே அக்கல் நாள் முழுவதும் வீதியில் கிடந்தும் ஒருவரும் அதை உருட்டித் தள்ளிவிடவில்லை.

7. கடைசியாய் ஒரு கூலிக்காரன் அங்கு வந்தான். வீதியில் ஒரு பெரிய கல்லிருப்பதைக் கண்டு அவன் கிட்டப் போய் ஐயோ! 'இந்தக் கல்லை யார் இங்கே வைத்தார்களோ தெரியவில்லை. இது எவ்வளவு மூடத்தனம்' என்று சொல்லி அக்கல்லைப் புரட்டித் தள்ளினான். கீழே ஒரு பையிருப்பதைக் கண்டு அதைக் கையிலெடுத்தான். அதில் நூறு ரூபாய் இருக்கக்கண்டு ஆனந்தம்கொண்டான்.

8. இதைப் பார்த்துக்கொண்டிருந்த பிரபு அவன் கிட்டப்போய் 'அந்தப் பை உன்னுடையதுதான். அதை நானே அங்கு வைத்தேன்' என்று சொல்லி நடந்த சங்கதியை அவனுக்குத் தெரிவித்தார். அப்பொழுது பார்த்துக்கொண்டிருந்தவர்கள் 'நான் அந்தக் கல்லைப் புரட்டினேனில்லையே, நான் புரட்டினேனில்லையே' என்று வருத்தப்பட்டார்கள். நாம் மற்றவர்களுக்குச் சகாயமான எதையும் செய்யப் பிரயாசப்படவேண்டுமேயன்றிப் பின்வாங்கலாகாது.



## 18. சிங்கமும் எருதுகளும்

1. ஒரு காட்டில் மூன்று எருதுகள் ஒன்றைவிட்டொன்று பிரியாமல் மிக்க அந்நியோந்நியமாய் வாழ்ந்துகொண்டிருந்தன. அவை எப்பொழுதும் ஒரேயிடத்தில் மேய்ந்து ஒரேயிடத்தில் தண்ணீர் குடித்து ஒரேயிடத்தில் படுத்துக்கொண்டிருந்தன. ஒரு எருதிற்கு ஏதாவது கெடுதி நேரிட்டால் மற்ற இரண்டும் அவ்வெருதின் கிட்டப்போய்த் தங்களாலியன்ற உதவிசெய்து அதைச் சந்தோஷப்படுத்தும்.

2. அவைகள் இப்படி ஒற்றுமையாய் வாழ்ந்துகொண் டிருப்பதை ஒரு சிங்கம் நெடுநாளாய்க் கவனித்து அவை களைப் பக்ஷிப்பதற்குச் சமயம் பார்த்துக்கொண்டிருந்தது. இதை அந்த எருதுகளறிந்து ஒன்றைவிட்டொன்று பிரி யாமல் வெகு ஜாக்கிரதையாயிருந்தன. அவைகள் எப் பொழுதும் ஒருமித்து வாழ்ந்துகொண்டிருந்ததினால் சிங்கம் அவைகளுக்குக் கிட்ட நெருங்கப் பயந்து சமயம் கிட்டும் வரையிலும் பொறுமையாயிருக்கத் தீர்மானித்தது.

3. ஆயினும் சிங்கம் அவைகளைப் பார்க்கப் பார்க்க, எப்படியாவது கொன்று தின்னவேண்டுமென்னும் ஆசை மேலிட்டது; இவைகள் ஒன்றாயிருப்பதினாலல்லவா நான் ஒன்றும் செய்யக்கூடவில்லை. எந்த உபாயத்தினாலாவது இவ்வெருதுகளைப் பிரித்துவிடவேண்டும்; அப்பொழுது தான் என் காரியம் சித்தியாகும், என்றிப்படி ஆலோசித்து அவைகளைப் பிரிக்கத் தலைப்பட்டது.

4. அது எருதுகளிடத்தில் போய் நீங்கள் ஓரேயிடத் தில் மேய்ந்துகொண்டிருந்தால் உங்களுக்கு நல்ல புல் எப்படி அகப்படும். அப்படி மேய்வதினால் உங்கள் உடம் புகள் மிகவும் மெலிந்துபோயின. 'இதோ! நீ என்னுடன் வா, நான் நல்ல புல்லைக் காட்டுகின்றேன்' என்று ஒரு எருதை நாலடி தூரம் அழைத்துப்போயிற்று. அப்புறம் அதைப் பார்த்து 'உன்னை மற்ற இரண்டு எருதுகளும் எப்போ பார்த்தாலும் திட்டிக்கொண்டிருக்கின்றன' என்று பொய்யும் புளுகும் சொல்லிற்று. அப்படிச் சொல்லவே அவ்வெருது கோபங்கொண்டு சற்றுத் தூரத்தில் தனி யாய் மேயப்போயிற்று.

5. அப்பால், சிங்கம் மற்ற இரண்டெருதில் ஒன்றை அழைத்து 'சிநேகிதா! நீங்களிருவரும் மிக்க நண்பர்போற்

காண்கிறது, ஆனால் உன் கூட்டாளி எப்பொழுதும் உன் பேரில் நிந்தனை சொல்லுகிறான்; தன் வாய்ப்புல்லை நீ பிடுங்கிக்கொள்வதால் தன் உடம்பு மெலிந்துபோகிறதாம். ஆகையால் நீ அவனோடு கூடவிருப்பது நல்லதல்ல' என்று சொல்லிற்று.

6. உடனே அவ்வெருது இதை மெய்யென்று நம்பி வேறிடத்திற்குப் பிரிந்துபோயிற்று. பிறகு சிங்கம் மூன்றாம் எருதண்டைபோய் இவ்விதமாய்ச் சொல்லி அதற்கும் கோபத்தை யுண்டாக்கிற்று. இவ்விதமாய் எருதுகள் மூன்றும் ஒன்றையொன்று பகைத்து வெவ்வேறிடத்தில் மேயப்போயின.

7. இப்பொழுது சிங்கத்திற்குத் தக்க சமயம் வாய்த்தது. அது கொழுத்த அவ்வெருதுகளின்மேல் வீழ்ந்து ஒன்றொன்றாய்க் கொன்று பக்ஷித்தது. இப்படியே சிங்கம் தன் சாதுரிய புத்தியால் காரியத்தை நிறைவேற்றிக் கொண்டது.

8. பிள்ளைகளே! இக்கதையினால் நாம் தெரிந்துகொள்ளக் கூடியதென்ன? நாம் ஒற்றுமையாயிருக்கும்போது பகைவர் நமக்குத் தீங்குசெய்தல் கூடாது. ஆகையால் நாம் ஒருவரையும் விரோதம் பண்ணிக்கொள்ளக்கூடாது. ஐக்கிய வாழ்வே வலிமையென்பதை நாம் எப்பொழுதும் ஞாபகத்தில் வைக்கவேண்டும். 'எத்தால் வாழலாம், ஒத்தால் வாழலாம்' என்று ஒரு பழமொழியுமுண்டு.

## 19. ஔவை பாடல்

1. சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோ ரிடாதா ரிழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ளபடி.

2. ஒருநா ளுணவை யொழியென்றா லொழியாய்
இருநாளைக் கேலென்றா லேலாய்—ஒருநாளும்
என்னோ வறியா யிடும்பைகூ ரென்வயிறே
உன்னோடு வாழ்த லரிது.

3. பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்—கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் யாரே யனுபவிப்பார்
பாவிகா ளந்தப் பணம்.

4. ஆன முதலி லதிகம் செலவானால்
மான மழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்குங் கள்ளனாய் யேழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனா நாடு.

5. ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றி யதுவரினும் வந்தெய்து—மொன்றை
நினையாத முன்வந்து நிற்பினு நிற்கு
மெனையாளு மீசன் செயல்.

6. மரம் பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி
யிரந்தழைப்பார் யாவருமிங் கில்லை—சுரந்தமுதல்
கற்றா தரல்போற் கரவா தளிப்பரே
லுற்றா ருலகத் தவர்.

# 20. இரண்டு தேனீக்கள்

1. மந்தாரமில்லாத ஒருநாட் காலையில் இரண்டு தேனீக்கள் தேனைத் தேடி யுண்ணப் புறப்பட்டன. அவைகளிலொன்று புத்தியும் மிதமாய்ச் சாப்பிடும் குணமுமுடையது. மற்றத் தேனீ அஜாக்கிரதையுடையது; அதிகமாய்ச் சாப்பிடவேண்டுமென்னும் பேரவாவுடையது. அவைகளிரண்டும், மிக்க வாசனையுள்ள செடிகளும், நல்ல பரிமள வாடை வீசுகின்ற புஷ்பங்களும், ருசியான பழங்களும் நிறைந்த ஓர் நந்தவனத்தை யடைந்தன.

2. அங்கு வந்து சேர்ந்தவுடன் அவைகளிரண்டும் தங்கள் வேலையை ஆரம்பித்தன. ஒரு தேனீ மதுவுண்பதைக் கவனியாமல் தன் கூண்டைக் கட்டுவதற்கு வேண்டிய மெழுகைச் சேர்க்கத் தலைப்பட்டது. மற்றொன்று, தற்கால இன்பத்தைத் தவிர வேறொன்றும் பிரயோஜனமில்லையென்று உத்தேசித்து மதுவுண்டு களித்தது.

3. இப்படி இவைகளிரண்டும் அச்சோலை யெங்கும் பறந்து உல்லாசமாய்த் திரியும்போது ஒரு மரக்கொம்பிலிருந்து ஒரு கலசம் தொங்குவதைக் கண்டன. உடனே அவை யிரண்டும் கிட்டப்போய், அக்கலசம் தேனால் நிறைந்திருக்கிறதென்று அறிந்தன.

4. புத்தியுள்ள முதலாம் தேனீ அக்கலசத்தினோரத்தில் உட்கார்ந்து சிறிது சிறிதாய் உறிஞ்சிக் குடித்தது. யோசனையற்ற மற்றத் தேனீ தன் சிநேகிதனுடைய புத்தியையெல்லாம் கேளாமல் அக்கலசத்திற்குள் தலைகீழாய்ப் பாய்ந்தது.

5. புத்திசாலியான தேனீயோ அதிக தேனைச் சாப்பிட்டால் அபாயம் நேரிடுமென்றஞ்சி மட்டாய்ச் சாப்பிட்டுப்

பறந்துபோயிற்று. மற்றத் தேனீ ஒன்றையும் கவனியாமல் வயிறு கொண்டமட்டும் குடித்தது; மிக்க அவாவுடன் போய் விழுந்தமையால் அதின் கால்கள் தேனில் புதைந்தன; இறகுகள் தேனில் நனைந்து பளுவடைந்தமையால் பறக்க உதவாமற்போயின.

6. சாயங்காலமானவுடன் புத்திசாலியான தேனீ தன் கூண்டுக்குப் போகப் புறப்பட்டது. அப்பொழுது தன் தோழனாகிய மற்றத்தேனீயைத் தேடிப்பார்த்தும் அது எங்கும் அகப்படவில்லை. கலசத்தண்டை போய்ப் பார்த்தது. அங்கே மதிகெட்ட அத்தேனீ தித்திப்பான தேனை அதிகமாயுண்டு மயங்கி வீழ்ந்து கிடப்பதையும், கால்கள் தேனில் ஒட்டிக்கொண்டிருப்பதையும் கண்டது. ஐயோ பாவம்! மிதமாயுண்டால் இக்கதி நேரிடாதே என்று பரிதபித்தது.

7. பிறகு கொஞ்சநேரத்தில் அந்தத் தேனீ இறந்து போயிற்று. அதைக் கண்ட மற்றத் தேனீ விசனத்தோடு தன் கூண்டிற்குத் திரும்பிற்று.

8. சில மனுஷரும் இந்த மூடத் தேனீயைப்போலிருக்கிறார்கள். அவர்கள் இந்த உலகத்திலுள்ள இன்பங்கள் யாவையும் அனுபவிக்கவேண்டுமென்று எண்ணி மோசம் போகிறார்கள். ஐயோ! இவர்கள் கதியும் அந்த ஈயின் கதிபோலத்தானாகும். எவ்விஷயத்திலும் நாம் மிதமாயிருக்கவேண்டும்.



## 21. அரசன் வேண்டுமென்ற தவளைகள்

1. ஒரு குளத்திலிருந்த தவளைகள் சுயாதீனமாயிருப்பது நல்லதல்லவென்றெண்ணித் தங்களுக்கு ஒரு ராஜனை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்று பிரகஸ்பதியிடம் வேண்டுதல் செய்தன. அந்த நற்குணமுள்ள பிரகஸ்பதியும் அதற்குடன்பட்டார். அப்படியே அவர் ஒரு மரக்கட்டையை அந்தக் குளத்தில் எறிந்தார்.

2. முதலில் தவளைகளனைத்தும் அம்மரக்கட்டைக்கு மிக்க மரியாதை செய்தன. அவைகள் தூரத்தில் நின்று

தங்கள் புதிய ராஜாவை நமஸ்கரித்தன. ராஜாவுக்குக் கேட்கும்படியாக அவைகள் ஒன்றும் பேசுவதில்லே. இப்படிப் பலநாட் சென்றன. அந்தப் புதிய ராஜாவோ வாய் திறந்து பேசுகிறதில்லே; ஒன்றும் சாப்பிடுகிறதுமில்லே.

3. பிறகு தவளேகள் சந்தேகப்பட்டு 'இது என்ன ஆச்சரியம். நமக்கு ஸ்வாமி கொடுத்தருளிய ராஜா பேச மாட்டேனென்கிருரே; நாம் கொஞ்சம் கிட்டப்போய்ப் பார்க்கலாமென்று சொல்லி ஒவ்வொன்ருய்க் கிட்டப்போயின. அப்பொழுதும் அந்த ராஜா ஒன்றும் பேசவில்லே.'

4. அப்புறம் ஒரு தவளே மெதுவாய்க் கிட்டப்போய் அக்கட்டையில் ஏறிக்கொண்டது. கட்டை சும்மாவிருக்கவே தவளேகளெல்லாம் ஒன்ருென்ருய் அக்கட்டையின்மேல் ஏறிக்கொண்டு, 'ஓஹோ : இதுவென்ன ? உயிரில்லாத இந்த மரமா நமக்கு ராஜா' என்று சொல்லி பிரகஸ்பதியைப் பரிகாசம்பண்ணி வேருெரு ராஜனே அனுப்பும்படி கேட்டுக் கொண்டன.

5. அவர் மிகவும் கோபங்கொண்டு, 'இந்தப் பேதைத் தவளேகளுக்கு யாதொரு கெடுதியும் செய்யக்கூடாத கட்டையை அனுப்பினதினுலல்லவா இவ்வளவு கெடுதி நேரிட்டது. இனி இவைகளுக்கு நற்புத்தி படிப்பிக்கவேண்டும்' என்று சொல்லி ஒரு நாரையை அனுப்பினுர்.

6. அந்த நாரை குளக்கரையில் போய் உட்கார்ந்து கொண்டது. தவளேகளெல்லாம் தங்கள் புதிய ராஜாவைத் தரிசிக்க வந்தன. நாரையோ அவைகளே ஒன்ருென்ருய்ப் பட்சிக்கத் தலேப்பட்டது.

7. தவளேகள் தங்கள் தொகை நாளுக்குநாள் குறைவதைக் கண்டு அதற்குக் காரணமென்னவென்று கண்டு பிடிக்க முயன்றன. கடைசியில் நாரையே தவளேகளே ஒன்ருென்ருய்ப் பக்ஷிப்பதாகத் தெரியவந்தது.

8. அப்பொழுது அவைகள் முன்னிலும் அதிகமாக வெறுப்படைந்தன. ஆகையால் அவைகள் பிரகஸ்பதியிடத்தில் மூன்றும் முறையும் மனுச்செய்து வேறொரு ராஜனை அனுப்பும்படி கேட்டுக்கொண்டன. அவர் அதற்குடன்படாமல் 'உங்கள் கஷ்டங்களெல்லாம் நீங்களே உங்கள்மேல் வருவித்துக்கொண்டவைகள். நீங்கள் உங்கள் நிலைமையைக்குறித்துத் திருப்தியடையாமல் ராஜன் வேண்டுமென்று கேட்டீர்கள். நான் உங்களுக்கேற்ற ராஜனையனுப்பியும் நீங்கள் திருப்தியடையாமையால் நாரையை அனுப்பினேன். இப்பொழுது நான் வேறு ராஜனை அனுப்பமாட்டேன்' என்றார்.

9. தவளைகள், ஐயோ! 'எங்கள் நிலைமையைக்குறித்துத் திருப்தியடையாமையாலல்லவா எங்களுக்கு இக்கதியாயிற்று' என்று சொல்லி விசனப்பட்டுக்கொண்டு போயின. நாரை தினத்திற்கு இரண்டு மூன்றாக அத்தவளைகளைப் புசித்துத் தொலைத்தன.

10. இக்கதையை வாசிக்கும் சிறுவர்களே, நாம் எப்பொழுதும் நமது நிலைமையைக்குறித்துத் திருப்தியுடையவர்களாயிருக்கவேண்டும். நமக்கு அது இல்லையே; நமக்கு இது இல்லையே; மற்றவர்கள் நன்றாயிருக்கிறார்களே என்று அதிருப்தியடைதல் தகாது.

## 22. அரசிறை

1. ராஜாங்கத்தாருக்குப் பிரஜைகள் கொடுத்துவரும் வரிப்பணத்திற்கு அரசிறை என்று பெயர். அரசுக்கு அல்லது ராஜாங்கத்தாருக்குக் கொடுக்கப்படும் வரிப்பணம் என்பது அதின் பொருள். ராஜாங்கத்தார் ஏழைகளா?

அவர்களுக்குப் பிரஜைகள் ஏன் பணம் கொடுக்கவேண்டும்? அப்படிப் பிரஜைகளால் கொடுக்கப்பட்ட பணத்தை ராஜாங்கத்தார் எவ்விதமாய் உபயோகப்படுத்துகிருர்கள்? இவ்விஷயங்களை நாம் சிறிது விசாரிப்போம்.

2. ஒரு தேசத்தில் வசிக்கும் ஜனங்கள் க்ஷேமமாய் வாழவேண்டுமாளுல் அவர்களுக்கு மேலதிகாரி ஒருவன் இருத்தல் வேண்டும். அம்மேலதிகாரிதான் ராஜன். ராஜன் நம்மை ஆள்வதற்கு ராஜாங்கத்திற்கு வேண்டிய தக்க உத்தியோகஸ்தர்களை நியமித்து நம்மைப் பாதுகாத்து இரட்சித்து வருகிருன். நாம் இப்போது அங்கிலேய துரைத்தனத்தின் கீழிருக்கின்ருேம்.

3. முற்காலத்தில் நாம் வேறு ராஜாக்களால் ஆளப்பட்டோம். அக்காலத்தில் பிரஜைகளுக்கு யாதொருவிதமான சுகமும் கிடையாது. எங்கே பார்த்தாலும் கலகமும் சண்டையும்தான். ஒரு ஊரிலிருந்து வேருெரு ஊருக்குப் போகவேண்டுமாளுல் காடு வழியாய்ப் பிரயாணம் செய்ய வேண்டி யிருந்தது. திருடர் பதிவிருந்து வழிப்போக்கரைக் கொன்று அவர்கள் சொத்தைக் கொள்ளையிட்டனர். தங்களுக்கிஷ்டமான மதத்தை அனுசரிக்க ஜனங்களுக்கு சுவாதீனம் கிடையாது.

4. நோயாளிகளுக்கு வைத்தியம் செய்வதற்கு வைத்தியசாலைகள் ஏற்படவில்லை. சமாச்சாரங்களைப் பிறவூர்களுக்கனுப்பத் தபால் தந்தி முதலிய சாதனங்களில்லை. இப்படியெல்லாம் ஜனங்கள் பலவிதமாகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

5. அங்கிலேய ராஜாங்கத்தின்கீழ் நமக்கு எல்லாவிதமான சுகமுமுண்டு. இவ்விதமாய் நம்மை க்ஷேமமாய்ப் பாதுகாப்பதற்கு ராஜாங்கத்தாருக்குப் பணம் வேண்டும். அவர்கள் இந்தியாவை வேறு சத்துராதி வந்து தாக்கி

நாசம் செய்யாதபடி காவல் செய்யவேண்டும். ஜனங்களின் க்ஷேமத்தின்பொருட்டு, தபால் தந்தி வைத்தியசாலை முதலியவைகளை ஏற்படுத்தி நடத்தவேண்டும்.

6. ஜனங்கள் ஒருவரோடொருவர் சண்டையிட்டுக் கொள்ளாமலும், ஒருவர் சொத்தை ஒருவர் அபகரியாமலுமிருக்கச் செய்வதற்கு நியாயஸ்தலங்களை ஸ்தாபிக்கவேண்டும். திருட்டு, கொள்ளை முதலியவைகளால் ஜனங்கள் உபத்திரவப்படாதபடி போலீஸ்வீரரை ஏற்படுத்தி நகர காவல் செய்யவேண்டும். கொள்ளைநோய் பஞ்சம் முதலிய க்ஷாமகாலங்களில் ஜனங்களுக்கு உதவிசெய்யவேண்டும். அவர்கள் குடிப்பதற்கும் ஸ்நானம் செய்வதற்கும் சுத்த ஜலம் கொடுக்கவேண்டும். வீடுகளிலிருந்துண்டாகும் அழுக்கை அகற்றுவதற்குச் சாக்கடைகள் கட்டி, அழுக்கு நீரைச் சமுத்திரத்திற் சேர்க்கவேண்டும். இராத்திரிகாலத்தில் ஜனங்கள் பயமில்லாமல் போக்குவரவு செய்வதற்கு வீதிகளில் விளக்கேற்றவேண்டும்.

7. இவ்விதமாய் ஜனங்களுக்கனுகூலமானவற்றைச் செய்வதற்குத்தான் வரிப்பணம் வசூல் செய்யப்படுகிறது. ராஜாங்கத்தார் வரிப்பணம் தண்டும்போது நாம் வருத்தப்படாது மிக்க சந்தோஷத்தோடு கொடுத்தல்வேண்டும். ஐயோ! நாம் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பணத்தைக் கொடுக்கும்படி ராஜாங்கத்தார் பலவந்தம் செய்கிறார்களே யென்று சிலர் சொல்வதுண்டு. இது மகா தவறு. நமக்கு ஒரு பொருள் வேண்டுமானால் பணங்கொடுத்தாலன்றி அது நமக்குக் கிடையாது. அதுபோலவே நமக்கு மேற்கூறிய இத்தனை சௌகரியங்களும் வேண்டுமானால் வரி செலுத்தித்தான் ஆகவேண்டும்.

8. வரி வசூல் செய்யும்போது ராஜாங்கத்தார் சில விதிகளைக் கவனிக்கிறார்கள். ஒவ்வொருவரும் கொடுக்க

வேண்டிய வரி இவ்வளவென்று திட்டமாய்த் தெரிவித்து விடுகிறார்கள். ஜனங்களின் நன்மைக்காக எவ்வளவு தொகை வசூல் செய்யவேண்டுமோ அதைக் கணக்கிட்டு, ஜனங்களிடத்தில் எவ்வளவு குறைத்து வாங்க முடியுமோ அவ்வளவுதான் வாங்குகிறார்கள். வரி வசூல் செய்வதில் ஏழையென்றும் பணக்காரனென்றும் வித்தியாசம் காட்டாமல் எல்லோரையும் சமமாகவே பாவிக்கிறார்கள். ஆகையால் நாம் வரி செலுத்தும் விஷயத்தில் முந்தி நிற்போமாக.



## 23. ஏழாம் எட்வர்ட் அரசர்

1. படத்திலே காணப்படும் அரசர் யார்? அவரை நீங்கள் முன்னெப்போதாவது பார்த்ததுண்டா? நீங்கள் அவரை நேரில் பார்த்திராவிட்டாலும் அவருடைய முகம்

உங்களுக்கு நன்ருய்த் தெரியுமென்று நினைக்கிருேம். அவர் இப்போ நம்மை ஆண்டுவரும் ஜார்ஜ் சக்கரவர்த்தியின் தந்தை. மகாராணி விக்டோரியா சக்கரவர்த்தினியின் சிரேஷ்ட குமாரன்.

2. அவர் 1841-ம் ஷு நவம்பர்மீ 9உ இங்கிலாந்தின் சிரேஷ்ட நகரமாகிய லண்டன் பட்டணத்திலே பிறந்தார். அவர் பிறந்த தினம் இங்கிலாந்தில் ஓர் விசேஷ தினமாகக் கொண்டாடப்பட்டது. குழந்தை பிறந்த செய்தி அதி விரைவில் இங்கிலாந்து முழுவதும் பரவிற்று. இராணிக்குப் பின் ராஜாவாகிச் செங்கோல் செலுத்த ஒரு ஆண் குழந்தை பிறந்தது அனைவருக்கும் சந்தோஷத்தைக் கொடுத்தது.

3. ராஜ குமாரனை அவர் தாயார் மிகவும் அருமையாய் வளர்த்துவந்தார். அவரைப் பக்குவமாய் வளர்ப்பதற்குத் தக்க தாதியரை நியமித்தார். அவர்கள் ராஜகுழந்தையைத் தங்கள் கண்ணிலு மருமையாய் வளர்த்துவந்தார்கள். ராணியும் அவர்கள் நாயகனும் அவர் கல்வி விஷயத்தில் மிக்க சிரத்தை யெடுத்துக்கொண்டனர். இவ்விதமாய் அவர் மிக்க தேர்ச்சியடைந்து ராணிக்குப் பின் இங்கிலாந்தின் ராஜாவாகத்தக்க திறமையுடையவரானுர்.

4. மகாராணி விக்டோரியா பெருமாட்டி 1901-ம் ஷு ஜனவரிமீ 22உ இறந்தார். உடனே எட்வர்ட் அரசர் பட்டத்திற்கு வந்தார். அவருடைய பட்டாபிஷேக வைபவம் இங்கிலாந்திலே மிகவும் சிறப்பாய் நடைபெற்றது. அச்சமயத்தில் அப்பட்டாபிஷேகச் சிறப்பைக் கண்டு களிக்கும்வண்ணம் அநேக இந்திய ராஜாக்களும் பிரபுக்களும் அங்குச் சென்றனர். அதைப்போலும் காட்சி அத்தேசத்தில் முன் ஒருபோதும் நடந்ததில்லையாம்.

77698

5. எட்வர்ட் ராஜாவுடைய பட்டாபிஷேக வைபவத்தை இத்தேசத்திலும் பிரசித்தப்படுத்தும்படி டில்லியில் ஒரு ராஜசபை கூட்டினார்கள். அதற்கு இத்தேசத்து ராஜாக்கள், பிரபுக்கள், துரைமக்கள் முதலிய யாவரும் போயிருந்தனர். எட்வர்ட் ராஜா அச்சமயத்தில் நேரில் வந்திருந்து அக்கொண்டாட்டத்தைச் சிறப்பியாவிட்டாலும், அவருக்குரிய மரியாதைகள் யாவும் அன்று செய்யப்பட்டன. வெடிகள் தீர்த்தன. மணிகள், கலீர் கலீர் என்று அடித்தன. அனைவரும் 'அரசன் நீடூழி வாழ்க' என்று ஆர்ப்பரித்தார்கள்.

6. நமது எட்வர்ட் ராஜா இளவரசராயிருந்த காலத்தில் ஒருமுறை இந்தியாவிற்கு வந்து பிரதானமான நகரங்களையெல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டுப் போனார். அவரை அப்பொழுது கண்டு பழகினவர்கள் இப்பொழுது மிருக்கிறார்கள்.

7. அவருக்குச் சண்டை செய்தலில் விருப்பமில்லை. எப்பொழுதும் எல்லா விஷயங்களிலும் சமாதானத்தையே கைக்கொண்டு வந்தார். ஆகையால் அவருக்குச் சமாதானப் பிரியரான எட்வர்ட் என்று பெயருண்டாயிற்று.

8. எட்வர்ட் சக்கரவர்த்தி 1910-ம் வருஷம் மேமீ 7உ இறந்தார். அவர் ஏறக்குறைய ஒன்பது வருஷம்தான் ராஜாவாயிருந்தார். ஆனாலும் அவருடைய அன்பும், கூர்ந்த புத்தியும், பொறுமையும் அவரை இன்னும் ஞாபகப்படுத்துகின்றது.

9. அவருக்குப்பின் இப்பொழுது அவருடைய குமாரனாகிய ஐந்தாம் ஜார்ஜ் ராஜாவாயிருக்கின்றார். அவரிடத்தில் நாம் அன்புகூர்வோமாக.



## 24. மாடாட்டியும் பெருமாள் மாடும்

1. மாடாட்டிக்கு மாட்டை வீட்டுக்கு வீடு, தெருவுக்குத் தெரு கொண்டுபோய் ஆடச்செய்து பொருள் சம்பாதிப்பதே தொழில். அவன் அதிகாலையிலெழுந்து தன் வேலைக்குப் புறப்படுகின்றான். கிழிந்துபோன பழைய துணிகளே அவன் தலைப்பாகை, யாரிடத்திலாவது யாசகம் பண்ணி வாங்கிக்கொண்ட பழைய சொக்காய்களை அவன் போட்டுக்கொள்ளுகிறான். துணிகளால் செய்யப்பட்ட அங்கிகள், மணிகள், சங்கிலிகள் முதலியவைகளை மாட்டிற் கணிந்து அதை அலங்காரம் செய்துகொள்ளுகிறான்.

2. அவன் கையில் ஒருவிதமான பறையை வைத்திருக்கின்றான். அவன் அந்தப் பறையை யடித்து உரத்த சத்தம் செய்கின்றான். உடனே ஜனங்கள் வந்து கூடுகிறார்கள். விசேஷமாய்ச் சிறுவர்கள்தான் அவன் செய்யும் வேடிக்கையைப் பார்க்கப் போவார்கள். பெண்களும் போய் அவ் வேடிக்கையைப் பார்ப்பதுண்டு. வேடிக்கை பார்ப்பவர்களை அவன் துட்டுக் கேட்பான். அத்துட்டைக்கொண்டு தான் அவன் ஜீவனம் செய்யவேண்டும்.

3. அவன் மாட்டை நன்றாய்ப் பழக்கியிருக்கின்றான். அவன் சொல்வதெல்லாவற்றையும் அது செய்யும். பறையை யடிக்கும்போது தலையை யாட்டும்படி அவன் அதற்குக் கற்றுக்கொடுத்திருக்கிறான். எப்பொழுது அது ஆமென்று தலையாட்ட வேண்டுமென்று விரும்புகின்றானே அப்பொழுது அவன் பறையை யடிக்கின்றான். உடனே அந்த மாடு தலையை யசைத்து ஆமென்று சொல்வதுபோல் குறிப்பிக்கின்றது. ஆகையால் அது தன் சுய புத்தியைக் கொண்டு தலையசைக்கிறதில்லை.

4. அவனுடைய மாடு நன்றாய்ப் பழக்கப்பட்டிருக்கிறது. அது அவன் சொன்னதெல்லாவற்றையும் செய்யும். முழங்காலில் நின்று சலாம் செய்யும். காலைத் தூக்கும். படுக்கச் சொன்னால் படுக்கும். வேடிக்கை பார்க்கும் ஜனங்களை முத்தியிடச் சொன்னால் இடும். கோபித்துக்கொண்டு போகச் சொன்னால் போகும். இப்படிப் பலவிதமான வேடிக்கைகளைக் காட்டி அவன் துட்டுச் சம்பாதிப்பான். குழந்தைகளுக்கு இந்த மாட்டைக் கண்டால் மிகவுமானந்தம்.

5. மாடுகளை ஆட்டி இவ்விதமாய்ச் சம்பாதிக்க முயல்வதினால் பிரயோசனமில்லை. அதினால் வரும் வரும்படி

மிகவும் சொற்பம். அதைக்கொண்டு அவனும் மாடும் ஜீவிக்க வேண்டியதாயிருக்கிறது. அந்த வரும்படி அவனுக்குப் போதாது.

6. அவன் மாடாட்டும் தொழிலை நீக்கிவிட்டுக் கஷ்டப்பட்டு வேலைசெய்தால் அவனுக்குப் போதியளவு வரும்படி வரும். அவனும் அவனுடைய மனைவி மக்களும் சுகமாய் வாழலாம். மாடும், வண்டியிழுத்தல் உழுதல் முதலிய வேலைகளைச் செய்து வயிறுர ஊண் உண்ணலாகும்.

7. நமது தேசத்தில் அநேகர் இவ்விதமான அற்ப தொழில்களில் தங்கள் காலத்தைக் கழிக்கின்றனர். இதினுல்தான் நமது தேசம் சிறப்படைகிறதில்லை. எப்பொழுதும் வறுமையே மேலிட்டிருக்கிறது. நாம் ஒவ்வொருவரும் நம்மால் கூடியளவு வேலைசெய்து நம்மையும் நம்மைச் சேர்ந்தவர்களையும் விருத்தியடையச் செய்யவேண்டும்.

## 25. கிளிப்பிள்ளையால் மோசம்போனது

1. ஒரு வர்த்தகன் ஒரு கிளிப்பிள்ளையை வளர்த்து வந்தான். அவன் எப்பொழுதும் அதின் பக்கத்திலிருந்து அதற்குப் பேசக் கற்றுக்கொடுப்பான். அவன் எந்தக் கேள்வியைக் கேட்டாலும் 'அதற்குச் சந்தேகமில்லை' என்று அது மறுமொழி சொல்ல அக்கிளிப்பிள்ளைக்கு விசேஷமாய்க் கற்றுக்கொடுத்திருந்தான். பிறகு அவன் மற்றவர்களை மோசம்செய்ய யோசித்து ஒருபாயம் செய்தான்.

2. தன்னிடத்திலிருந்த நூறு ரூபாயை ஓரிடத்திலே புதைத்து வைத்துவிட்டு, கிளியை அவ்விடத்திற்குக் கொண்டுபோய், 'கிளியே இவ்விடத்திலே பணப்புதையலிருக்குமா?' என்றுன். உடனே அக்கிளி 'அதற்குச் சந்தேக



மில்லே' என்றது. வர்த்தகன் அவ்விடத்திலே தோண்டி நூறு ரூபாயை எடுத்து எல்லாருக்கும் காண்பித்தான். பிறகும் இப்படியே செய்துகொண்டு வந்தமையால் ஜனங் கள் அக்கிளிக்கு ஏதோ மகத்துவமிருப்பதாக எண்ணிக் கொண்டார்கள்.

3. வர்த்தகன் அக்கிளியை ஒருநாள் கடைவீதி வழி யாய்க் கொண்டுவரும்போது ஒரு பிரபு அவ்வர்த்தகனை உற் றுப்பார்த்தார். உடனே வர்த்தகன் அவரிடத்தில் போய் 'ஐயா, என்ன பார்க்கின்றீர்?' என்றான். பிரபு, 'ஒன்று மில்லே, சில ஜனங்கள் ஒரு அதிசயமான கிளியைக்குறித் துப் பேசினதை நான் கேட்டிருக்கின்றேன். அந்தக் கிளி இதுதானவென்று பார்க்கின்றேன்' என்றார்.

4. வர்த்தகன், 'ஆமாம்! இதுதான் அந்தக் கிளி. இதின் மகத்துவத்தை நான் காண்பிக்கின்றேன் வாரும்' என்று

சொல்லி, தான் முன்னமே ரூபாய் புதைத்துவைத்திருந்த விடத்திற்கு அழைத்துப்போய் கிளியை நோக்கி, 'இவ்விடத்தில் புதையலிருக்குமா?' என்முன். கிளி வழக்கப்படி 'அதற்குச் சந்தேகமில்லை' என்றது. வர்த்தகன் உடனே அவ்விடத்தைத் தோண்டி நூறு ரூபாயை எடுத்துக் காண்பித்தான். பிரபு மிகவும் ஆச்சரியமடைந்து 'கிளியின் விலை என்ன?' என்று கேட்டார்.

5. வர்த்தகன் 'கிளியின் விலை ஆயிரம் ரூபா' என்முன். இந்தக் கிளியொன்று மாத்திரமிருந்தால் குறைவொன்றுமில்லையென்று பிரபு யோசித்து உடனே ஆயிரம் ரூபாயைக் கொடுத்து அக்கிளியை வாங்கிக்கொண்டான். வர்த்தகனும் தன் மோசம் பலித்ததேயென்று சந்தோஷத்தோடு வீட்டிற்குப் போய்விட்டான்.

6. பிரபு அக்கிளியை வீட்டிற்குக் கொண்டுபோய் ஒரு கூண்டிலடைத்து தன் படுக்கைக்குப் பக்கத்தில் அக்கூண்டைத் தூக்கிவைத்தார். பிறகு போஜனமான பின்பு பிரபு கிளியண்டை போய் 'கிளியே உன் பெயரென்ன?' என்முர். உடனே கிளி 'அதற்குச் சந்தேகமில்லை' என்றது. பிரபு 'இதேது! இந்தக் கிளி ஏதோ பிதற்றுகின்றதே' என்று சொல்லி 'இவ்விடத்திலே புதையலிருக்குமா?' என்முர். கிளி வழக்கம்போல 'அதற்குச் சந்தேகமில்லை' என்றது.

7. பிரபு தான் மிகவுமருமையாய்க் கட்டின வீட்டுக் கூடத்தை உடனே தோண்டிப் பார்த்தார். அங்கொரு புதையலும் காணப்படவில்லை. பின்னும் தோண்டினார்; ஒன்றுமகப்படவில்லை. அவருக்குக் கோபமுண்டாயிற்று. 'ஏ, கிளியே! நீ என் வாயில் மண்ணைப்போடவா ஏற்பட்டாய்?' என்முர். உடனே அக்கிளி 'அதற்குச் சந்தேகமில்லை' என்றது.

8. பிறகு அந்தப் பிரபு தன் மூடத்தனத்திற்காக விச னப்பட்டு அக்கிளியை விற்றுவிடப் பிரயாசப்பட்டார். ஆகையால் நாம் எதையும் கண்டமாத்திரத்திலேயே நிதா னித்தல் புத்தியல்ல. நமக்கு அவசியமில்லாத வஸ்து எவ் வளவு விலை சரசமானதாயிருந்தாலும் அதை நாம் வாங்கக் கூடாது. நமக்குக் கிடைத்தது போதுமென்று எப்பொழு தும் திருப்தியடைந்திருப்போமாக.

## 26. பொருளாசையை நீக்கல்

1. நாடுநகர் வீடுமாடு நற்பொரு ளெல்லாம்
நடுவன் வரும்பொழுது நாடி வருமோ
கூடுபோன பின்பவற்றால் கொள்பய னென்னே
கூத்தன்பதங் குறித்துநின் றாடு பாம்பே.

2. யானைசேனை தேர்பரி யாவு மணியாய்
யமன்வரும் போதுதுணை யாமோ வறியாய்
ஞானம்சற்று மில்லாத நாய்கட்குப் புத்தி
நாடிவரும் படிநின் றாடு பாம்பே.

3. மாணிக்க மணிமுடி வாகு வலயம்
மார்பிற்றொங்கும் பதக்கங்கள் மற்றும் பணிகள்
ஆணிப்பொன் முத்தாரமம்பொன் அந்தக் கடகம்
அழிவான பொருள்களென் றாடு பாம்பே.

4. மாடகூட மாளிகைகள் வண்ண மண்டபம்
மதில்சூழ்ந்த வரமனை மற்று முள்ளவை
கூடவரா தென்றவந்தக் கொள்கை யறிந்தோர்
குலவாமல் வெறுப்பாரென் றாடு பாம்பே.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS,
REGISTERED
29 APR 1914
MADRAS.

5. மலைபோன்ற செம்பொற்குவை வைத்திருப் பவர்
மறலிவரு கையிலதை வாரிச்செல்வ ரோ
அலையாம லகத்தினை அததன்பால் வைத்தோர்
அழியாரென் றேதுணிந் தாடு பாம்பே.

6. பஞ்சணையும் பூவணையும் பாயலும் வெறும்
பாழ்சுடு காடுதனில் பயன் பெறுமோ
மஞ்சள்மணம் போகச்சுடு நாறு மணங்கள்
வருமென்று தெளிந்துநின் றாடு பாம்பே.

7. முக்கனியும் சர்க்கரையும் போதகங்களும்
முதிர்சுவைப் பண்டங்களும் முந்தியுண்ட வாய்
மிக்கவுயிர் போனபின்பு மண்ணை விழுங்க
மெய்யாகக் கண்டோமென் றாடு பாம்பே.

8. மக்கள்பெண்டிர் சுற்ற மருமக்கள் மற்றவர்
மாளும்போது கூடவவர் மாள்வ தில்லையே
தக்கவுல கனைத்தையும் தந்த கர்த்தனைத்
தாவித்தாவித் துதித்துநின் றாடு பாம்பே.

## 27. சிறுவனும் மைனாக் குஞ்சுகளும்

1. ஒரு கிராமத்தில் பெருமாள் என்னும் பெயருடைய ஒரு சிறுவனிருந்தான். ஒருநாள் அவன் தகப்பனார் அவனை யழைத்து 'அடே பெருமாள், இந்தப் பையைக் கொண்டு போய்ப் பக்கத்துத் தெருவிலிருக்கும் பொன்னம்மாளிடத் தில் கொடுத்துவிட்டுச் சீக்கிரம் வா' என்று சொல்லி அனுப்பினான். அப்படியே பெருமாள் பையை யெடுத்துக் கொண்டு விரைவாய்ப் போய்ப் பொன்னம்மாள் வீட்டுக் கதவைத் தட்டினான்.

2. பொன்னம்மாள் கதவைத் திறந்துகொண்டு வெளி யே வந்து பையை வாங்கிக்கொண்டு மிகவும் சந்தோஷப் பட்டாள். பிறகு பையனைப் பார்த்து 'அப்பா பெருமாள்: நீ எப்போ வருவாயென்று வழி பார்த்திருந்தேன். நீ வந்தது



நல்லதாயிற்று. நான் உனக்கு ஒரு வெகுமதி வைத்திருக்கிறேன்' என்று சொல்லி இரண்டு மைனுக் குஞ்சுகளை அவன் கையில் கொடுத்தாள்.

3. அவ்வன் அவைகளைச் சந்தோஷமாய் வாங்கிக் கொண்டு 'அம்மா இவைகள் உங்களுக்கு எப்படிக் கிடைத்தன?' என்று கேட்டான். அதற்குப் பொன்னம்மாள், 'எங்கள் வீட்டுப் புறக்கடையில் ஒரு வேப்பமரமுண்டு. அந்த மரப் பொந்தில் இவைகளிருந்தன. தாய்ப்பட்சி நேற்றுவரையிலும் இவைகளுக்கு இரைகொடுத்து மிகவு மன்பாய் வளர்த்துவந்தது. இன்றுதான் நான் உனக்குக் கொடுப்பதற்காக இவைகளைப் பிடித்தேன்' என்று மறு மொழி சொன்னுள்.

4. பையன் அவளுக்கு வந்தனம் சொல்லி அவைகளைக் கொண்டுபோகப் புறப்பட்டான். அப்பொழுது பொன்னம்மாள் பையனை நோக்கி, 'இவைகளில் ஒன்றை நீ

வைத்துக்கொள், மற்றதை உன் தம்பி கோபாலனுக்கு நான் கொடுத்ததாகக் கொடு என்று சொல்லி அவைகளை ஒரு குட்டையில் கட்டி, வழியில் மூட்டையை அவிழ்க்காதே' என்று திட்டம்பண்ணி அனுப்பினாள்.

5. பையன் 'அப்படியே ஆகட்டும்' என்று சொல்லி விட்டு மைனாக்குஞ்சுகளிரண்டையும் வாங்கிக்கொண்டு வீட்டுக் கோடினான். போகும்போது வழியில் அவன் சிநேகிதனாகிய வடிவேலன் அவனைக் கண்டு, 'என்ன மூட்டை பலமாயிருக்கிறதே' என்றான். ஒன்றுமில்லை, 'நமது பொன்னம்மாள் இரண்டு மைனாக்குஞ்சுகளை இனாமாகக் கொடுத்தாள். அவைகளை வீட்டுக்கு எடுத்துக்கொண்டு போகிறேன்' என்றான்.

6. வடிவேலன், 'ஏதோ அவைகளைக் காட்டு பார்ப்போம்' எனவே பெருமாள் மூட்டையை யவிழ்த்தான். உடனே ஒரு குஞ்சு பறந்துபோயிற்று. பெருமாள் அழுதுகொண்டு குஞ்சைப் பிடிக்கப்போனான். அது எங்கேயோ மறைந்துபோயிற்று. அவன் தன்னாலானமட்டும் தேடியும் அது அகப்படவில்லை.

7. பிறகு மற்றக் குஞ்சை யெடுத்துக்கொண்டு அவன் விசனத்தோடு வீட்டிற்குப் போனான். அவன் தாயார் அவனைப் பார்த்து 'மகனே, நீ அழுததாக உன் முகம் காட்டுகின்றதே; என்ன சமாச்சாரம், சொல்' என்றாள். அப்பொழுது பெருமாள் நடந்த யாவற்றையும் விபரமாய்ச் சொல்லி, 'கோபாலனுக்கென்று பொன்னம்மாள் கொடுத்த மைனாக் குஞ்சு ஓடிப்போயிற்று; எனக்கென்ன, என்னுடைய குஞ்சு பத்திரமாயிருக்கிறது' என்றான்.

8. 'பொன்னம்மாள் குஞ்சுகளை உன் கையிற் கொடுக்கும்போது இந்தக் குஞ்சு உனக்கும், பறந்துபோன குஞ்சு

அவனுக்குமென்று சொல்லிக் கொடுத்தாளா' என்று தாயார் கேட்டாள். பையன் 'இல்லை, இரண்டையும் கொடுத்து நீ ஒன்று, கோபாலனொன்று எடுத்துக்கொள்ளுங்களென்று சொல்லிக் கொடுத்தாள்' என்றான்.

9 அப்படியானால் 'பறந்துபோன குஞ்சுதான் உன்னுடையது. அது உன் அஜாக்கிரதையினால் பறந்துபோயிற்று. வழியில் மூட்டையை அவிழ்க்கவேண்டாமென்று பொன்னம்மாள் சொல்லியும் நீ அதைக் கவனியாமல் அவிழ்த்தாய். ஆகையால் நீயே நஷ்டப்படவேண்டும். மற்றக் குஞ்சை அவனுக்குக் கொடுத்துவிடு' என்றாள்.

10. பெருமாள் தான் செய்தது தப்பிதமென்றுணர்ந்து குஞ்சைத் தம்பியிடத்தில் கொடுத்து, அடா தம்பி! 'இந்த மைனுக்குஞ்சைப் பொன்னம்மாள் உனக்குக் கொடுக்கச் சொன்னாள். நீ அதைப் பத்திரமாய் வைத்து வளர்க்கவேண்டும்' என்றான்.

11. பெருமாள் கஷ்டப்பட்டுக் குஞ்சுகளைக் கொண்டு வந்ததும் அவற்றிலொன்று பறந்துபோனதும் கோபாலனுக்குத் தெரியும். ஆகையால் அவன் தனக்குக் கிடைத்த குஞ்சை மறுபடியும் பெருமாளிடத்தில் கொடுத்து, அண்ணா! 'நீயே இந்தக் குஞ்சை வைத்திரு. நம்மிருவரில் யாரிடத்திலிருந்தாலும் ஒன்றுதான்' என்றான். 'மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்.'



## 28. புலி

1. புலியானது ஆசியாக் கண்டத்தின் உஷ்ணமான பாகங்களில் காணப்படுகிறது. அது விசேஷமாய் இந்தியாவிலும் இந்திய தீவுகளிலும் வாசம்செய்கின்றது. சீனதேசத்திலும் அது காணப்படுவதுண்டு. இந்தியாவிலே அது மலையாளத்திலும் வங்காளத்திலும் திரளாய்ச் சஞ்சரிக்கின்றது.

2. புலி பூனையின் வகுப்பைச்சேர்ந்தது. அது மிக்க அழகுள்ளதாகையால் மிகவும் சிறந்த மிருகங்களிலொன்ருக எண்ணப்படுகிறது. அதின் உயரம் ஏறக்குறைய மூன்றரையடி. நீளம் வால் நீங்கலாக ஏழு அல்லது எட்டு அடியிருக்கும்; ஆனல் புலிகளெல்லாம் ஒரே அளவுடையவைகளல்ல.

3. புலியின் தலை பருத்து வட்டமாயிருக்கும். அதின் செவிகள் குறுகியவை. அவை ஒன்றுக்கொன்று தூரமாயிருக்கும். புலியின் வாய் அகன்றதும் பயங்கரமானது

மாயிருக்கும். உதடுகளில் நீண்ட உரோமங்களுண்டு. பற்கள் மாமிசத்தைக் கடித்துக் கிழிப்பதற்கேற்ற பலமுடையவைகள். அவை பார்ப்பவர்களுக்குத் திகிலையுண்டாக்கும்.

4. புலியின் சரீரம் பிரகாசமான மெல்லிய உரோமத்தால் மூடப்பட்டிருக்கின்றது. அது மஞ்சள் அல்லது பொன்னிறமுடையது. அதின் சரீரத்தில் எண்ணிறந்த கருவரிகளுண்டு. இக்காரணத்தினுல் அதற்குக் கோடுவரி என்றும் ஒரு பெயருண்டு. அதின் முகமும், மிடறும், கீழ்வயிறும் வெண்ணிறம் பொருந்தியிருக்கும். அவற்றில் வரிகள் காணப்படா. அதின் வால் நுனி கறுத்திருக்கும்.

5. புலியின் கால் பூனையின் காலைப்போல மெதுவாயிருக்கும். அதின் உள்ளங்கால் மெத்தைபோல விருக்கும். கால்களில் கூரிய நகங்களுண்டு. அது நடக்கும்போது ஓசையுண்டாகாதிருக்கும்படி நகங்களை உள்ளே இழுத்துக்கொள்ளும். மனிதனையாவது மிருகங்களையாவது அடித்துக் கொல்ல எத்தனிக்கும்போது அது தன் நகங்களை வெளியே நீட்டி அவற்ருல் பீறிக் கொல்ல ஆரம்பிக்கும்.

6. புலி மாமிச பக்ஷணி. அது இதர மிருகங்களைத் தின்று ஜீவிக்கும். அது சிங்கத்திற் கிரண்டாவதான வலிமையுடையது. ஒரு எருதையாவது, மானையாவது, குதிரையையாவது அது கொல்லும்போது, பூனை எலியைத் தூக்கிக்கொண்டுபோவதுபோல அவற்றைச் சுலபமாய்த் தூக்கிச் செல்லும். புலி பசித்தாலும் புல்லைத் தின்னுது. புலி சில சமயங்களில் மனிதரையும் பக்ஷிப்பதுண்டு. ஒரு தடவை அது மனிதனைக் கொன்று தின்று வழக்கப்பட்டால் அப்புறம் அது மனிதரையே கொன்று தின்ன வழி பார்க்கும். வேறு மாமிசத்தை விரும்பாது.



7. மேலே காட்டியிருக்கும் படத்தில் ஒரு புலி தூங்கிக்கொண்டிருந்த ஒரு பையனைக் கடித்து இழுத்துக் கொண்டு போவதைக் காண்கிறீர்கள். வங்காளத்தில் இரு புறமும் காடடர்ந்த ஒரு நதிக்கரையில் ஒரு பிரயாணியும் நான்கு வயதுள்ள அவன் மகனும் ஒருநாளிரவு தங்க வேண்டியிருந்தது. அவர்களோடுகூட வேறு பிரயாணிகளும் வந்து சேர்ந்தமையால் அனைவரும் பயமில்லாமல் அங்கு இராத்திரியைக் கழிக்கலாமென்று யோசித்து அவ்விடத்தில் படுத்துக்கொண்டார்கள். நடு இராத்திரியில் புலி

யொன்று வரவே எல்லாரும் எழுந்தோடினுர்கள். பைய னுக்கு ஓடச் சக்தியில்லை. புலி அவனைக் கடித்து இழுத்துக் கொண்டு போயிற்று. தகப்பன் பையனுடைய காலைப் பிடித்திழுத்துத் தடுக்க முயன்றும் பயனில்லாமற்போயிற்று. புலியோ பையனைக் கொன்று தின்றது.

8. புலியினுல் மனிதருக்கு நேரிடுமாபத்து மிகவு மதிகம். இந்தியாவில் வருஷாவருஷம் அநேகர் புலியாற் கொல்லப்படுகிருர்கள். ஆகையால் புலியைக் கொல்பவர் களுக்கு ராஜாங்கத்தார் இனும் கொடுக்கிருர்கள்.

## 29. சங்கீத வித்துவானுக்குச் சூடுபோட்டது

1. தென் தேசத்திலே சங்கீதத்தில் மிக்க பிரசித்தி பெற்ற ஒரு சங்கீத வித்துவானிருந்தான். அவன் தன் வீணையை யெடுத்துக்கொண்டு ஊருக்கூர் சென்று பாடி ஜீவனஞ்செய்வது வழக்கம். அவன் பாட்டைக் கேட்ட வர்கள் அவனுக்குத் தங்களாலியன்றளவு பொருளுதவி செய்வார்கள்.

2. ஒருநாள் அச்சங்கீத வித்துவான் பல கிராமங் களுக்குச் சென்று பாடியபின் ஒரு ஊருக்கு வந்தான். அப்பொழுது அஸ்தமன காலமாகையால் அவ்வூரிலே இராத்தங்கி மறுநாள போகலாமென்று உத்தேசித்தான். இராத்தங்குவதற்கும் போஜனம் செய்வதற்கும் இடந் தேடிப் போகும்போது, ஒரு இடையன் வீடு தென்பட்டது. சங்கீத வித்துவான் இடையன்விட்டுத் திண்ணையின்மேல் உட்கார்ந்து தான் பொழுதுபோக்குவதற்காகக் கொஞ்சம் பாடினுல் ஏதாவது அகப்படுமென்றெண்ணி அங்கிருந்த படியே பாட ஆரம்பித்தான்.

3. சங்கீத வித்துவான் பாடுவதைக் கேட்டு அநேகர் வந்து கூடினார்கள். இடையனும் வெளியே வந்து அவன் பாடுவதைக் கேட்டுக்கொண்டிருந்தான். அப்பொழுது சங்கீத வித்துவான் தான் பாடும் பாட்டுகளுக்கேற்கத் தலையையசைத்துக் கையை அடிக்கடி நீட்டிப் பாடிக்கொண்டிருந்தான். இதைக்கண்ட இடையன் வீட்டுக்குள்ளேபோய் மனைவியைக் கூப்பிட்டுக் 'கரண்டி எங்கே?' என்றான்.

4. அவள் 'கரண்டி ஏதுக்கு?' என்றாள். 'அது எதற்காகவாவது இருக்கட்டும், கரண்டியை உடனே கொண்டுவா' எனவே அவள் அதைக் கொண்டுவந்து கொடுத்தாள். இடையன் அதைக் கொண்டுபோய் அடுப்பிலே காயவைத்துவிட்டுப் பழையபடியும் வந்து பாட்டுக் கேட்டுக்கொண்டிருந்தான்.

5. சங்கீத வித்துவானோ பின்னும் தலையையசைத்து வெகு உற்சாகமாகப் பாடிக்கொண்டிருந்தான். இடையன் எழுந்து விரைவாய் உள்ளேபோய், பழுக்கக் காய்ந்திருந்த கரண்டியை எடுத்துக்கொண்டு வந்து சங்கீத வித்துவானைக் கீழேதள்ளித் தொடையிலும் முதுகிலும் சூடுபோட்டான். வித்துவான் வேதனை பொறுக்கமாட்டாமல் கூவியழுதான். அண்டை அயலிலுள்ளவர்கள் ஓடிவந்து சங்கீத வித்துவானை விடுவித்து இடையனை வைதார்கள்.

6. பிறகு வித்துவான் நியாயாதிபதியண்டைபோய்ப் பிராது செய்துகொண்டான். நியாயாதிபதி இடையனை வரவழைத்து 'நீ ஏன் இப்படிப்பட்ட அக்கிரமம் செய்தாய்?' என்றான். அதற்கு இடையன் 'தர்மதுரையே, நான் அக்கிரமம் செய்யவில்லை. கடந்துபோன வாரத்தில் என்னுடைய ஆடுகளிலொன்று கத்த ஆரம்பித்தது. அது என்னவென்று நான் போய்ப் பார்த்தபோது அவ்வாடு வலிகண்டு

கால்களை யடித்துத் தலையை யசைத்துப் பின்னும் கத்திற்று. உடனே அதற்குச் சூடுபோட்டால் பிழைக்குமென்று சிலர் சொன்னார்கள், அப்படியே சூடுபோட்டேன்; அவ்வாடு பிழைத்துக்கொண்டது. அதேபிரகாரம் இவ்வித்துவானுக்கும் வலிகண்டமையால், 'என் வீட்டுக்கு வந்தவனைச் சாகவிடக்கூடாதென்று சூடுபோட்டேன்' என்றான்.

7. நியாயாதிபதி 'இவனுக்கு எப்படி வலிகண்டது? என்றான். அதற்கு அவன் 'ஸ்வாமி! இவன் நேற்றுச் சாயங்காலம் என் வீட்டுத்திண்ணையில் நல்ல சௌக்கியமாய் வந்து உட்கார்ந்தான். பிறகு இவனுக்கு வலியுண்டாக இவன் தலையை யசைத்துக் கையையாட்டிக் கத்தி வெகு கோரணி செய்தான். வலிக்கு மருந்து சூடாகையால் நான் காலதாமசம் செய்யாமல் கரண்டிக் காம்பைக் காயவைத்துச் சூடுபோட்டு இவனைப் பிழைக்க வைத்தேன். இவன் சற்றாகிலும் நன்றியில்லாமல் என்மேல் பிராதுசெய்கிறான்' என்றான்.

8. நியாயாதிபதி அவனுடைய மூடத்தனத்திற்காக அவனைத் தண்டித்து, சங்கீத வித்துவானுக்கு நூறு ரூபாய் கொடுக்கும்படி தீர்ப்புச்செய்தான். அருமை தெரியாதவர்களிடத்தில் நாம் நமது வித்தையைக் காட்டினால் ஆபத்து வந்து நேரிடும்.

## 30. தொத்து நோய்களைத் தடுப்பதெப்படி?

1. மனுஷருக்குப் பலவிதமான நோய்கள் வருகின்றன. சில நோய்கள் ஒருவனுக்கு வந்தால் அவனிருக்கிற வீட்டிலுள்ள மற்றவர்களுக்கும் வருகின்றன. இப்படிப்பட்ட நோய்களுக்குத் தொத்து நோய்கள் என்று பெயர். விஷ

பேதி, வைசூரி, கொள்ளைநோய் முதலியவைகள் தொத்து நோய்கள். நெருப்புக் காய்ச்சலும் தொத்து நோய்தான். இப்படிப்பட்ட தொத்து நோய்களால் நமது தேசத்தில் வருஷா வருஷம் பல பேர் இறந்துபோகின்றனர்.

2. முற்காலத்திலே இங்கிலாந்திலும் ஜனங்கள் தொத்து நோய்களால் திரளாய் இறந்தனர். ஆனால் இப்பொழுதோ அங்குள்ளவர்கள் சௌக்கிய விஷயத்தில் மிக்க ஜாக்கிரதையா யிருக்கின்றனர். ஆகையால் இப்பொழுது தொத்து நோய்கள் இங்கிலாந்தில் அதிகமாய்க் காணப்படு கிறதில்லை. இந்தியாவிலுள்ள நாமும் இப்படிப்பட்ட நோய்கள் வராமல் தடுப்பதற்கு முயற்சி செய்தல்வேண்டும்.

3. அசுத்தமே எல்லா வியாதிகளுக்கும் காரணம். அழுக்கு, நோய்க்குத் தாய் என்று ஒரு அங்கிலேய பழமொழி யுண்டு. ஆகையால் நாம் நமது ஆகாரத்தைப்பற்றியும், தேகத்தைப்பற்றியும், வீட்டைப்பற்றியும் ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். முதலாவது நாம் குடிக்கும் தண்ணீர் சுத்தமா யிருக்கவேண்டியது. நிலையாய் நிற்கும் குளத்தின் ஜலத்தைப் பானஞ்செய்யக்கூடாது. ஓடுகிற ஆற்றின் ஜலம் அல்லது ஆழமான கிணற்று ஜலம் பானம் பண்ணுவதற் கேற்றது. அப்படிப்பட்ட ஜலம் அகப்படாவிட்டால் வேறு விதமாய் அகப்படும் ஜலத்தை வடிகட்டி நன்றாய்க் காய்ச் சிச் சாப்பிடுவது மிகவும் நல்லது. அப்படிக் காய்ச்சுவதினால் அசுத்த ஜலத்திலிருக்கிற விஷம் நீங்கிப்போகிறது. அசுத்த மான ஜலத்தைப் பருகுவதால் காய்ச்சலுண்டாகின்றது.

4. நமது வீடுகளுக்குக் கிட்டத் தண்ணீர் தங்கி நின்று அழுகுவதினாலும் காய்ச்சல் முதலிய நோய்களுண்டாகின் றன. காய்ச்சலா யிருக்கும்போது குளிர்காற்றிலும் பனியி லும் திரியலாகாது. இரவில் வெளியே புறப்படாமலிருப்பது

நல்லது. குவைனு என்கிற வெள்ளைச் சூரணம் காய்ச்சலுக்குப் பரம அவுஷதம். சாதாரணமாய் தபால் உத்தியோகசாலைகளில் அதைச் செலவில்லாமல் ஜனங்களுக்குக் கொடுக்கிறார்கள்.

5. வைசூரி விஷபேதி முதலிய வியாதிகளுக்கும் அசுத்தமே காரணம். இவ்வித வியாதிகள் வராமல் தடுப்பதற்கு நாம் சுகத்திற்கேற்ற விதிகளை அனுசரிக்கவேண்டும். நன்றாய் வெந்த ஆகாரத்தைப் புசித்து நமது தேகத்தை ஆரோக்கியமாய் வைத்திருக்கவேண்டும். தொத்துநோய் பரவியிருக்கும் காலத்தில் இராக்காலங்களில் நாம் வெளியே திரிதல் கூடாது. அதிசீக்கிரம் படுக்கைக்குப் போகவேண்டும். அதிகாலையில் எழுந்திருக்கவேண்டும். காலையில் காப்பியையாவது சாப்பிட்டபின்பன்றி வெறுவயிற்றோடு வெளியே போகக்கூடாது. இளைப்பைத்தரும் வேலைகளைச் செய்வதும் பசியாயிருத்தலும் தகாது.

6. பழைய சாதத்தையாவது நன்றாய்ப் பழுக்காத பழங்களையாவது சாப்பிடக்கூடாது. பதமழிந்த மாமிசங்களையும் சுலபமாய் ஜீரணமாகாத பண்டங்களையும் கண்டிப்பாய் நீக்கவேண்டும். அளவுக்கு மிஞ்சிச் சாப்பிடாமல் மிதமாய்ப் போஜனம் செய்யவேண்டும்.

7. நமது உடுப்பு விஷயத்திலும் மிகுந்த ஜாக்கிரதையா யிருத்தல்வேண்டும். அனலான உடைகள் மிகவும் நலம். படுக்கப்போகும்போது வயிற்றைக் கம்பளித் துணியால் சுற்றிக்கொள்வது தொத்துநோய்களைத் தடுப்பதற்கு மிகவு மனுகூலமானது. வைசூரி மிகவும் பயங்கரமான நோய், அதில் அநேக வகைகளுண்டு. அது வராமல் தடுப்பதற்கு முக்கியமான ஒரு வழியுண்டு. அது, அம்மை குத்திக்கொள்ளலாம். சரியாய் அம்மை குத்திக்கொண்டால்

இந்நோய் காண்பது மிகவும் அபூர்வம். ஒருக்கால் கண்டாலும் உபத்திரவம் செய்யாது. குழந்தைப் பருவத்தில் ஒரு முறையும், பன்னிரண்டு வயதுக்குப்பின் ஒருமுறையும் அம்மை குத்திக்கொள்ளல் மிகவும் நல்லது.

8. ஒருவனுக்கு அம்மை கண்டிருந்தால், முன் அம்மை வந்து தேறினவர்களன்றி மற்றவர்கள் அவன் கிட்டப்போகக் கூடாது. அம்மைக் கொப்புளத்திலிருந்து வரும் பால் வேறொருவ ருடம்பிலும் பட விடக்கூடாது. அவர்களிருக்குமிடத்திலுள்ள காற்றையும் சுவாசித்தல் கூடாது. இவ்விதமாய் நாம் சுகத்திற்கேற்ற வழிகளைத் தேடிக்கொண்டால், தொத்துநோய்கள் நம்மை அணுகமாட்டா.

## 31. அக்பர் சக்கரவர்த்தி

1. படத்திலே காணப்படும் உருவம் ஒரு மகமதிய ராஜனைக் குறிப்பிக்கின்றது. முற்காலத்தில் இந்தியாவைப் பற்பல மகமதிய அரசர் ஆண்டுவந்தார்கள். அவர்களில் அக்பர் சக்கரவர்த்தி ஒருவர். படத்திலே காணப்படுபவர் அவர்தான்.

2. அவர் ஹுமாயூன் என்னும் மகமதிய சக்கரவர்த்தியின் குமாரன். தாயும் தகப்பனும் அவரைச் சாதாரணமாய் வளர்ப்புத்தாய் கையில் ஒப்புவிப்பது வழக்கம். ஆகையால் சிறுவயசில் அவர் அநேக ஆபத்துகளுக்குள்ளானார். எவ்வித கஷ்டம் நேரிட்டாலும் அவர் சிறிதும் அஞ்சுவதில்லை. மிகவும் கலங்கா நெஞ்சமுடையவர்.

3. சிறுவராயிருக்கும்போது அவர் கல்வியை மிகவும் அசட்டைசெய்தார். அவருக்குப் பதின்மூன்று வயசானவுடன் அவருடைய தகப்பனார் இறந்தார். உடனே அவர் சக்



கரவர்த்தியானார். ஆயினும் அவருக்கு அப்பொழுது ஆளும் திறமையில்லாமையால் பைரம் கான் என்னும் ஒரு மக மதிய பிரபு அவர்பேரால் ராஜ்ஜியத்தை நடத்திவந்தார். நான்கு வருஷங்களின்பின் அக்பர் ராஜ்ஜியத்தை ஆளத் தகுந்த பருவமடைந்தார். உடனே ராஜ்ஜிய விஷயங்கள் யாவும் அவர் கையில் ஒப்புவிக்கப்பட்டன.

4. அக்பர் அநேக நாடுகளை ஜயித்துத் தன்னுடைய தாக்கிக்கொண்டார். ஜனங்களுக்கு எவ்விதமாயும் நன்மை செய்யவேண்டுமென்பதே அவர் கருத்து. அக்பர் மிகுந்த புத்தியும் இரக்கமுமுடைய அரசன். தன் பிரஜைகள் யாவ ரும் ஒற்றுமையாய் வாழவேண்டுமென்பது அவர் விருப் பம். ஆகையால் அவர் ஜாதிபேதம் மதபேதம் என் பவையில்லாமல் அனைவரையும் ஓரே மாதிரியாய் நடத்தி வந்தார்.

5. அக்பர் கடின வரி வசூல் செய்யாமல் நியாயமான வரிதண்டி ஜனங்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்தார். அவர் பட்டத்திற்கு வந்தவுடன் மகமதியரல்லாத மற்ற ஜனங்களிடத்தில் வசூல் செய்யப்பட்ட வரியை நிறுத்திவிட்டார். மத வைராக்கியம் அவரிடத்தில் இல்லை. எல்லா மதங்களிலும் நன்மையுண்டென்று அவர் நம்பினார். மதவிஷயமாக அவர் ஒருவரையும் இம்சை செய்யவில்லை.

6. சகல மதத்தைச் சேர்ந்த வித்துவான்களையும் அவர் தமது அரமனைக்கு அழைப்பதுண்டு. மதசம்பந்தமாக அவர்கள் சொல்லும் யாவற்றையும் அவர் ஜாக்கிரதையாய்க் கவனிப்பார். மகமதியரில் ஒரு வகுப்பார் அவரை அவிசுவாசி என்று சொல்லிக்கொள்வார்கள்.

7. அக்பர் சகல ஜனங்களிடத்திலும் அன்புடையவர். ஜனங்களுக்கு நேரும் கஷ்டத்தைத் தனக்கு நேர்ந்த கஷ்டமாகவே மதித்து நடப்பார். ஆகையால் பிரஜைகள் அவரைச் சுவாமியின் அவதாரமென மதித்து மரியாதை செய்தார்கள். ஜனங்களுக்குள்ளிருந்த கொடிய வழக்கங்களை முற்றிலும் நீக்கிவிட அவர் பிரயாசப்பட்டார்.

8. இக்காரணங்களினால் அக்பருடைய ஆளுகை மிகக் கீர்த்திபெற்று விளங்கிற்று. ஆயினும் அவருடைய பிற்காலம் மிக்க விசனகரமானது. அவருடைய மூன்று பிள்ளைகளும் அவருக்கு விசனமுண்டாகும்படி நடந்துகொண்டார்கள். அவர்கள் மூவரும் மகா துன்மார்க்கர். ஆயினும் அவர் தைரியமாய் ஏறக்குறைய நாற்பத்தொன்பது வருஷம் அரசாண்டார்.

9. அக்பர் நல்ல அரசனாயிருந்தமையால் அவருடைய பெயர் இன்னும் ஞாபகத்திலிருக்கின்றது. ஜனங்கள் நன்

மைக்கென்று அவரைப்போல் பாடுபட்ட வேறு மகமதிய அரசன் ஒருவனுமில்லை. ஆகையால் நாம் அவரை மறவா திருப்போமாக.

## 32. ஈஸ்வர பக்தி

1. பாராயோ என்னைமுகம்
பார்த்தொருக்கால் என்கவலை
தீராயோ வாய்திறந்து
செப்பாய் பராபரமே.

2. ஓயாதோ என்கவலை
உள்ளே ஆனந்தவெள்ளம்
பாயாதோ ஐயா
பகராய் பராபரமே.

3. ஓகோ உனைப்பிரிந்தார்
உள்ளம் கனலில்வைத்த
பாகோ மெழுகோ
பகராய் பராபரமே.

4. கடலமுதே தேனேஎன்
கண்ணே கவலைப்
படமுடியா தென்னைமுகம்
பார்நீ பராபரமே.

5. எண்ணுந எண்ணமெல்லாம்
எண்ணியெண்ணி ஏழைநெஞ்சம்
புண்ணுகச் செய்ததினிப்
போதும் பராபரமே.

6. ஆழித் துரும்பெனவே
அங்குமிங்கும் உன்னடிமை
பாழில் திரிவதென்ன
பாவம் பராபரமே.

7. ஐயோ உனைக்காண்பான்
ஆசைகொண்ட தத்தனையும்
பொய்யோ வெளியாய்
புகலாய் பராபரமே.

8. நன்றறியேன் தீதறியேன்
நானென்று நின்றவனார்
என்றறியேன் நானேழை
என்னே பராபரமே.

## 33. மதுரை

1. மதுரை ஓர் சிறந்த பட்டணம். அஃது சென்ன பட்டணத்திற்குத் தெற்கே ஏறக்குறைய முன்னூற்று நாற்பத்தெட்டுமைல் தூரத்திலிருக்கிறது. சென்னை ராஜதானிக்குச் சென்னபட்டணம் தலை நகராயிருப்பதுபோல மதுரை ஜில்லாவுக்கு மதுரை தலைநகராய் விளங்குகின்றது. மதுரைக்கு, ஆலவாயென்றும், திருவாலவாயென்றும், கூடல்மா நகரென்றும் வேறு பெயர்களுமுண்டு.

2. மதுரைப் பட்டணம் வைகையாற்றங்கரையின் தென்புறத்தில் கட்டப்பட்டிருக்கின்றது. ஆறில்லாத வூருக்கு அழகில்லை யென்பது முதுமொழி. வைகையாறு அந்தப் பட்டணத்தின் பக்கத்திலோடுவது ஜனங்களுக்கு மிகவும் அனுகூலமாயிருக்கின்றது. பானம் பண்ணுவதற்

கேற்ற தண்ணீரை ஜனங்கள் ஆற்றிலிருந்து எடுத்துக் கொள்ளுகின்றார்கள். ராஜாங்கத்தார் ஆற்று ஜலத்தைக் குழாய்கள் வழியாகவும் கொண்டுவந்து ஜனங்களுக்கு உபயோகப்படும்படி செய்கின்றனர். ஸ்நானம் செய்வதற்குப் பட்டணத்து ஜனங்கள் அவ்வாற்றிற்குச் செல்லுகின்றார்கள்.

3. வைகை ஆற்றில் எப்பொழுதும் ஜலமோடுகிறதில்லை. வெயிற்காலத்தில் அது வறண்டு மணலாய்க் கிடக்கும். அப்பொழுது கூட ஆற்றினொருபக்கத்தில் சிறிது தண்ணீர் அருவியாயோடிக்கொண்டிருக்கும். அதுவுமில்லாவிட்டால் ஜனங்கள் ஆற்று மணலில் குழிதோண்டி ஜலமெடுப்பார்கள்.

4. மதுரைப்பட்டணம் எல்லா விஷயத்திலும் சென்னபட்டணத்திற்கு இரண்டாவதாக விளங்குகின்றது. அது மிகவும் பழமையான பட்டணம். பூர்வகாலத்தில் பாண்டிய ராஜாக்கள் இருந்து அரசாண்டது அங்கேதான். அக்காலத்தில் அது பாண்டிய நாட்டின் ராஜதானியாயிருந்தது.

5. மதுரையிலே அங்கிலேயர் இந்தியர் முதலிய யாவரும் புகழ்ந்து கொண்டாடுகின்ற சிறந்த கட்டடங்களுண்டு. அங்குள்ள மீனாட்சியம்மன் கோயில் வெகு விநோதமானது. அது இருநூற்று எண்பத்திரண்டு கெஜ நீளமும் இருநூற்று நாற்பத்தெட்டு கெஜ அகலமுமுள்ளது. நாலுபுறத்திலும் மிக்க வழகான கோபுரங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அவை எப்பொழுதும் புதியவைபோற் காணப்படுகின்றன. நுனி தொடங்கி அடி வரையிலும் அக்கோபுரங்களில் பலவர்ணமிட் டலங்கரிக்கப்பட்ட சித்திரப்பாவைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அக்கோபுரங்

களை அநேக மைல் தூரத்திலிருப்பவர்களும் காணக்கூடியதா யிருக்கின்றது.

6. கோயிலுக்குள்ளே ஆயிரங்கால்களுள்ள ஓர் மண்டபமிருக்கின்றது. அந்த மண்டபத்துத் தூண்களில் மிகவும் அற்புதமான சிற்றுளி வேலை செய்யப்பட்டிருக்கின்றது. அவ்வேலைகள் பார்ப்பவர்களுக்கு வியப்பைத் தரும். இந்த மண்டபம் ஆரிய நாய்க்கனால் கட்டப்பட்டது. இந்தக் கோயிலிற் செய்யப்பட்டிருக்கும் சித்திரவேலைகள் இந்தியா முழுவதிலும் பிரசித்திபெற்றவை.

7. புதுமண்டபம் என்னும் சிறந்த மண்டபம் கோயிலுக்குப் பக்கத்தில் வீதியோரத்தில் கட்டப்பட்டிருக்கின்றது. அம்மண்டபம் திருமலை நாய்க்கனால் கட்டப்பட்டது. அதின் கற்றூண்களில் சிறந்த குதிரைவீரருடைய உருவங்களும், யானை, குதிரை, யாளி முதலியவைகளுடைய உருவங்களும் மிகவுமற்புதமாய் வெட்டப்பட்டிருக்கின்றன. இம்மண்டபத்தில் திருமலை நாய்க்கனும் அவன் மனைவியாராகிய மூவருடைய பிரதிமைகளும் மிகவுமலங்காரமாய் நிறுத்தப்பட்டிருக்கின்றன. இவையன்றி, திருமலை நாய்க்கன் அரமனை, மங்கம்மாள் சத்திரம் முதலியவை மதுரையிலுள்ள விசேஷ கட்டடங்கள். அங்குள்ள தெப்பக்குளமும் பார்க்கத்தக்கது.

8. மதுரை மிகவும் உஷ்ணமும் வறட்சியுமான பட்டணம். ஜனத்தொகையிலும் சென்னைக்கு இரண்டாவதாகச் சொல்லலாம். அங்கு விசேஷமாய்த் தமிழே பேசப்படுகின்றது. இப்பொழுது சிலர் தெலுங்கும் பேசுகிறார்கள். இங்கிலீஷ் பாஷை விசேஷமாய் வழங்கிவருகிறது. ஜனங்கள் கைத்தொழிலிற் சிறந்தவர்கள். நெசவு, மண் பாத்திரம், வெண்கலப்பாத்திரம் முதலியவை செய்தல்

அவர்களுடைய தொழில். ஆயிரக்கணக்காக ஜனங்கள் அங்குள்ள தொழிற்சாலைகளில் வேலை செய்கிறார்கள்.

9. தமிழ்ப்பாஷையைப் பெரிதும் வளர்த்தது மதுரை தான். பாண்டிய அரசர் தமிழை விருத்திசெய்வதற்கு வேண்டிய முயற்சிகள் செய்தனர். தமிழைப் பரிபாலித்த முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்னும் மூன்று சங்கங்களும் மதுரையிலேயே இருந்ததாகச் சொல்லப்படுகின்றது. தற்காலத்திலும் தமிழை வளர்ப்பதற்காக அங்கே ஒரு சஙக மேற்படுத்தப்பட்டிருக்கின்றது. அதற்கு நான்காம் சங்கமென்று பெயர். ஆகையால் தமிழ்ப் பாஷைக்கு மதுரை தாய்வீடென்று சொல்லுதல் தவறாகாது.

## 34. பருத்திச் செடி

1. பருத்தியானது மனிதருக்கு மிகவும் உபயோகமான செடிகளிலொன்று. பிள்ளைகளே! நாம் கட்டிக்கொள்ளும் வேஷ்டிகளும், அணிந்திருக்கும் சொக்காய்களும் எப்படி உண்டாகின்றனவென்று நீங்கள் எப்போதாவது சிந்தித்ததுண்டா? மாங்காய் தேங்காய் மரத்திற் காய்த்துத் தொங்குவதுபோல அவை மரங்களிலே காய்க்கின்றனவா? அல்லது மனிதன் தனக்கு வேண்டிய சாமான்களைச் செய்துகொள்வதுபோல அவற்றையும் செய்துகொள்ளுகிறானா? ஆம், மனிதன் அவைகளைச் செய்துகொள்ளுகிறான். எதைக் கொண்டு செய்துகொள்ளுகிறான்? பஞ்சினால் செய்து கொள்ளுகிறான். பஞ்சு பருத்திச் செடியிலிருந்துதான் உற்பத்தியாகின்றன. ஆகையால் பருத்திச் செடியைப் பற்றி நாம் சிறிது விசாரிப்போம்.

2. பருத்தி இந்தியாவில் விசேஷமாகக் காணப்படுகிற ஓர் செடி. அது சென்னை ராஜதானியில் திருநெல்வேலி,



கடப்பை, கர்னூல், பெல்லாரி, கோதாவரி, கிருஷ்ணா முதலிய ஜில்லாக்களில் விசேஷமாகப் பயிராகின்றது. பருத்திச் செடியில் இரண்டு வகையுண்டு. ஒன்று சாதாரணமாய் எங்கும் பயிராகிறது. அது ஏறக்குறைய மூன்றடி உயரம் வளரும். அப்பால் அது படர்ந்து விசாலிக்கத் தலைப்படுமே தவிர உயர்ந்து வளருகிறதில்லை. பிறகு அது புஷ்பித்துக் காய்க்க ஆரம்பிக்கின்றது.

3. பருத்திப் புஷ்பத்தின் நிறம் மஞ்சள்; காய் பச்சை வர்ணமுடையது. காய் முற்றுவதற்குமுன் வெட்டிப் பார்த்தால் உள்ளே வித்துக்களும் அவைகளைச் சுற்றி ஓர் வித வெண்மையான வஸ்துவும் காணப்படும். இந்த வஸ்து தான் பஞ்சு. காய் முற்றிப் பழுத்துக் காய்ந்து வெடிக்க ஆரம்பிக்கும். அப்பொழுது பஞ்சு வெளிப்படும். இந்த ஸ்திதியிலிருக்கும் காயொன்றைப் படத்திலே பார். பஞ்சு மிக்க வெண்மையும் மென்மையுமுள்ளது.

4. பருத்தியைப் பயிரிடுகிறவர்கள் பருத்திச் செடியை இரண்டு மூன்றடி தூரத்திற்கொன்றாக வரிசை வரிசையாய் நடுவார்கள். இப்படியே ஒவ்வொரு தோட்டத்திலும் நாலாயிரம் ஐயாயிரம் செடியிருக்கும். அவைகளைப் பத்திரமாய்ப் பாதுகாத்து வளர்த்துவருவார்கள். அவை காய்த்து அக்காய்களிலிருந்து பஞ்சு வெளிப்படும் சமயத்தில் கூலிக்காரரை விட்டுப் பஞ்சுக்கா யெல்லாவற்றையு மறுத்துக் கூடைகளிற் சேர்ப்பார்கள். பிறகு பஞ்சு வேறு கொட்டை வேறாகப் பிரித்து, பஞ்சை வெயிலில் உலர்த்திப் பெரிய சிப்பங்களாகக் கட்டுவார்கள். அச்சிப்பங்கள் துணி நெசவு பண்ணும் தேசங்களுக்கு அனுப்பப்படுகின்றன. ஏறக்குறைய நமது தேசத்துப் பஞ்செல்லாம் இங்கிலாந்திற்கே அனுப்பப்படுகின்றது. பருத்திக்கொட்டை மாட்டிற்குப் பிரியமான உணவு. அதைத் தவிட்டோடு கலந்து மாடுகளுக்கு வைக்கிறார்கள். பருத்திக்கொட்டையைச் செக்கிலிட்டு ஆட்டி எண்ணெ யெடுப்பதுமுண்டு.

5. நமது தேசத்தில் துணிநெசவு செய்பவர்கள் முற்காலத்தில் பஞ்சிலிருந்து தாங்களே நூல் நூற்று வேலை செய்து வந்தார்கள். இப்படி ஒரு ஸ்திரீ பஞ்சிலிருந்து நூல் நூற்பதைப் பின்வரும் படத்திலே பார். இவ்விதமாய் அவர்கள் கஷ்டப்பட்டுத் தங்களுக்கு வேண்டிய நெசவு நூலைத் தாங்களே செய்துகொள்ள வேண்டியதாயிருந்தது. இப்பொழுதோ நெசவுக்கு வேண்டிய நூல் யாவும் சீமையிலிருந்து கழிகளாகவே வந்துவிடுகின்றன. நெசவுகாரர் அதை வாங்கித் துணிகளாக நெய்கிறார்கள்.

6. ஏறக்குறைய முந்நூறு வருஷங்களுக்குமுன் பஞ்சு இங்கிலாந்திற்குக் கொண்டுபோகப்பட்டது. முதலில் அவ்விடத்திலுள்ள நெசவுகாரர் கைத்தறிகளில் துணிகளை நெசவுசெய்து வந்தார்கள். இப்பொழுதோ அவர்கள் நீரா



யந்திரங்களால் இயங்கும் பெரிய ஆலைகளில் வஸ்திரங்களை நெய்கிறார்கள். எல்லாத் தேசங்களிலும் பஞ்சாலைகளை ஸ்தாபித்திருக்கிறார்கள். அவ்வாலையின் ஒரு பக்கத்திலுள்ள தொட்டியில் பஞ்சைக் கொட்டிவிட்டால் அது மறுபக்கத்தில் துணியாய் நெசவாகி வந்துவிடுகிறது. இது மிகவும் விநோதமல்லவா? இதினால்தான் துணி நமக்கு வெகு சொற்ப விலைக்கு அகப்படுகிறது.

## 35. மூடத்தனம் மிகுந்த காக்கை

1. ஒரு பெரிய கழுகு ஒரு மலைச்சிகரத்தில் உட்கார்ந்து இரையகப்படவில்லையே யென்று விசாரப்பட்டுக் கொண்டிருந்தது. எந்தப் பக்கத்திற் சென்றாலும் அதற்கு இரையகப்படவில்லை. அம்மலையடிவாரத்தில் ஓரிடையன்



தன் ஆட்டுமந்தையை விட்டு மேய்த்துக்கொண்டிருந்தான். ஆடுகள் புல் நிறைந்த அவ்விடத்தில் நன்றாய் மேய்ந்து பக்கத்திலோடிக்கொண்டிருந்த சிற்றாற்றில் தண்ணீர் குடித்துக் குதூகலமாய் விளையாடிக்கொண்டிருந்தன.

2. பசியால் வருந்திக்கொண்டிருந்த அக்கழுகு ஆடுகளிலொன்றைக் கொன்று தின்ன இச்சைகொண்டது. உடனே அது மலைச்சிகரத்திலிருந்து அம்புபோல் பறந்துவந்து ஆட்டுக்குட்டிகளிலொன்றைத் தன் நகங்களால் தூக்கி மலையுச்சியிலுள்ள தன் கூண்டிற்குக் கொண்டுபோயிற்று. அங்கே அக்கழுகும் அதின் குஞ்சுகளும் அவ்வாட்டுக்குட்டியைப் பீறிக் கிழித்துப் பட்சித்தன.

3. இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த ஓர் மூடக் காக்கை தானும் அவ்வாறு செய்ய நிச்சயித்தது. 'ஓஹோ! அந்தக் கழுகு ஆட்டுக்குட்டியைத் தூக்கிக் கொண்டு போகவில்லையா? நானும் அந்தக் கழுகைப்போல் ஓர் பட்சிதானே. நான் ஏன் அப்படிச் செய்யக்கூடாது?' என்று தனக்குள் யோசித்தது.

4. பிறகு அக்காகம் தானும் அம்மலைச் சிகரத்திற் பறந்துபோய் உட்கார்ந்துகொண்டது. ஆட்டுக்குட்டியொன்று மலையடிவாரத்திற்கு வரும் சமயம் பார்த்து

காக்கை கீழே பறந்துவந்து அவ்வாட்டுக்குட்டியின் முது கின்மேல் உட்கார்ந்தது.

5. அப்பால் அது ஆட்டுக்குட்டியைத் தூக்கிக் கொண்டுபோக முயன்றும் பயன்படவில்லை. எவ்வளவோ பிரயாசப்பட்டுத் தூக்கிப் பார்த்தது, முடியவில்லை. ஐயோ! இவ்வாட்டுக்குட்டியைத் தூக்கிக்கொண்டு போய்விட்டால் நானும் என் குஞ்சுகளும் வயிறார உண்ணலாமே என்று பரிதபித்தது. ஆனால் ஒன்றும் பிரயோசனப்படவில்லை.

6. கழுகு ஆட்டுக்குட்டி யொன்றைத் தூக்கிக்கொண்டு போனதையும் காக்கையொன்று வேறொரு ஆட்டுக்குட்டி யைத் தூக்கிக்கொண்டுபோகப் பிரயத்தனப்படுவதையும் இடையன் தூரத்திலிருந்து கண்டு அவ்விடத்திற்கு ஓடிவந் தான். அவன் வருவதைக் கண்டு காக்கை ஓட எத்தனித் தது. அதின் நகங்கள் ஆட்டின் முதுகிலுள்ள கம்பளியில் மாட்டிக்கொண்டமையால் அது பறந்துபோக முடிய வில்லை. இதற்குள் இடையன் வந்து காக்கையைப் பிடித் துக்கொண்டான். காக்கை இடையன் கையிலகப்பட்டு மிகவும் வருத்தப்பட்டது.

7. சாயங்காலம் இடையன் காக்கையை வீட்டிற்குக் கொண்டுபோய்ப் பிள்ளைகளிடத்திற் கொடுத்தான். அவர் கள் இக்காக்கை ஏதென்று கேட்டார்கள். அவன் 'இக் காக்கை கழுகைப்போலிருக்க ஆசைகொண்டு இக்கதியடைந் தது. ஆட்டுக்குட்டியைக் கழுகைப்போல் தானும் தூக் கிக்கொண்டு போகலாமென்று ஆரம்பித்ததினால் நகம் ஆட்டுமயிரில் மாட்டிக்கொள்ள என் கையிலகப்பட்டது' என்றான். பிறகு அந்த இடையன் அக்காக்கையைக் கொன்றுவிட்டான்.

8. சிலர் இக்காக்கையைப்போல் தங்களுக்கடாத காரி யங்களில் பிரவேசிக்கின்றார்கள். 'அடாது செய்தவர் படாது

படுவர்' என்பதற்கிசைய நாம் ஒரு காரியத்தைச் செய்வதற்குமுன் நம்முடைய பலம் எவ்வளவென்று அளந்தறிய வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் பிறகு வருத்தப் படுவோம்.



## 36. நீல நரி

1. ஒரு நரி, ஒருநாளிராத்திரி கோழி திருடுவதற்காகப் புறப்பட்டது. எங்கும் இரை தேடிச் சென்றும் அதற்கு ஒன்றும் அகப்படவில்லை. கடைசியாய் அது தன் குகைக்குச் சமீபத்திலிருந்த ஒரு கிராமத்திற்குச் சென்றது. அங்கே சாயவேலைசெய்து ஜீவனம் செய்துகொண்டிருந்த ஒரு சாயக்காரனிருந்தான். இராத்திரி காலமாகையால் அவனும் அவன் மனைவிமக்களும் போஜனம் செய்துவிட்டுப் படுத்துக்கொண்டார்கள்.

2. நரி மெதுவாய் அவன் வீட்டுப் புறக்கடைச் சுவரண்டைபோய் நின்று சுற்றிப் பார்த்தது. அதற்கு ஒன்றும்

புலப்படவில்லை. உள்ளே சென்றால் ஏதாவது அகப்படு மென்றெண்ணி மதிற்சுவரின்மே லேறி வீட்டின் பின்புற மாகவிருந்த தோட்டத்திற்குள் குதித்தது. அப்படிக் குதிக்கும்போது இருட்டிலே இடம் தெரியாமல் சாயக் காரனுடைய பெரிய நீலத்தொட்டி ஒன்றில் விழுந்து விட்டது.

3. சாயக்காரன் அத்தொட்டி நிறைய நீலச்சாயத் தைக் கரைத்து வைத்திருந்தான். நரி அதில் விழுந்து ஒரு இரவு முழுவதும் தொட்டியிலேயே கிடந்தமையால் அச் சாயம் நரியின் தேகம் முழுவதும் நன்றாய்ச் சுவறிற்று. ஆகையால் அது முற்றிலும் நீல நரியாக மாறிற்று.

4. அதிகாலையில் சாயக்காரன் தொட்டியண்டை வந் தான். நரி அச்சந்தடி கேட்டுச் செத்ததுபோலப் பாசாங்கு பண்ணிக்கொண்டு தொட்டியில் கிடந்தது. சாயக்காரன் அது செத்துப்போயிற்றென்று எண்ணி எடுத்து வெளியே எறிந்துவிட்டான். நரியோ உடனே எழுந்து தான் வசிக் கும் காட்டிற்குட் சென்றது.

5. உடம்பிலேறிய சாயம் இதுவரையில் நன்றாய்க் காய்ந்து நரி நல்ல நீலவர்ணமுடையதாயிருந்தது. உடனே அதுபோய் மற்ற மிருகங்களுக்குத் தன்னைக் காண்பித்தது. அவைகள் அதைப் பார்த்து 'நீ யார்?' என்றன. நரி, 'நான் தான் உங்கள் அரசன்' என்று சொல்லிற்று.

6. இதைக் கேட்டவுடன் அவ்வனத்திலிருந்த மிருகங்க ளெல்லாம் அதற்கு ராஜ மரியாதை செய்தன. மிருகங் களுக்கரசனாகிய சிங்கம் அதற்கு வாகனமாயிற்று. நரி வனத்தில் பிரயாணம் செய்யும்போதெல்லாம் சிங்கத்தின் முதுகின்மேல் ஏறிக்கொண்டு சென்றது. அது தன் நீல நிறத்தை மற்ற மிருகங்களுக்குக் காண்பித்து, 'இதுவே

நமது பட்டத்து அங்கி. இதினல் நான் உங்கள் அரச னென்று அறியுங்கள்' என்றது. அதைக்கேட்ட யானை, புலி, கரடி முதலிய மிருகங்கள் யாவும் சாஷ்டாங்க நமஸ் காரம்செய்து 'நீல மகாராஜாவே வாழ்க' என்று அதை வாழ்த்தின.

7. நீல நரி தன் திருட்டுத்தனம் வெளிப்படாதிருக்கும் படி நரிகள் மாத்திரம் ராஜ தரிசனைக்கு வரக்கூடாதென்று கட்டளைபண்ணிற்று. இது நரிகளுக்கெல்லாம் சந்தேகத் தை உண்டாக்கிற்று. அவைகளுக்குத் தலைமையாயிருந்த ஒரு கிழ நரி அவைகளைப் பார்த்து, 'நான் சொல்வதை ஜாக் கிரதையாய்க் கேளுங்கள். இப்பொழுது நமக்கு ராஜாவாக நடிப்பவன் நம்மினத்தவனே. அவனுடைய சாயலைப் பாருங் கள். அவன் எல்லாவிஷயத்திலும் நம்மைப்போலவே இருக் கின்ருன்; நிறம்தான் வித்தியாசம். அவன் நீலத்தொட் டியில் விழுந்திருக்கவேண்டும்' என்றது.

8. இதைக்கேட்ட மற்ற நரிகளும், 'ஆமாம், இவனு டைய திருட்டுத்தனத்தை எப்படி வெளிப்படுத்தலாம்?' என்றன. கிழ நரி, 'நான் ஒரு உபாயம் சொல்லுகின்றேன் கேளுங்கள்: நாமெல்லாரும் அவனிருக்கும் ஸ்தலத்திற்குக் கிட்டப்போய்ச் செடிமறைவில் நின்று ஊளையிடுவோம். அப்பொழுது அவனும் எங்களைப்போலவே ஊளையிடுவான். உடனே இரகசியம் வெளிப்பட்டுப் போகும்' என்றது. நரிகள் எல்லாம் அதற்கு உடன்பட்டன.

9. அப்படியே எல்லா நரிகளும் கூட்டமாய்ச் சென்று செடிமறைவில் நின்று ஊளையிட்டன. ராஜாவாயிருந்த நீல நரியும் தன்னை மறந்து ஊளையிட்டது. அச்சமயத் தில் ராஜதரிசனை பண்ணிக்கொண்டு நின்ற புலிகளும் கரடி களும் ஓஹோ! இதென்ன! இது நரிபோற் காண்கின்றதே.

இதுவரையிலும் இதை வேறு ஜாதி மிருகமென்றல்லவோ எண்ணியிருந்தோம். இப்போது நாம் மோசம்போனோமே என்று சொல்லிப் பிறகு நீல நரிமேற் பாய்ந்து சின்னபின்னமாகக் கிழித்துக் கொன்றன. நரி தன் மூடத்தனத்திற்காக மிகவும் வருத்தப்பட்டு இறந்தது.

## 37. ஈசன் இறைவனைக் காக்க

நாம் அங்கிலேய துரைத்தனத்தின்கீழ் அடைந்திருக்கும் நன்மைகள் பல. அவை எவையென்று நீங்கள் ஒருவாறு அறிந்திருப்பீர்கள். நீங்கள் படிக்கும் பாட புஸ்தகங்களிலும் அவற்றைக்குறித்து விஸ்தாரமாகக் கூறப்பட்டிருக்கின்றன. அங்கிலேய ராஜ்ஜியத்திற்கு அதிபதியாக விருப்பவர் ஜார்ஜ் அரசர். பிரஜைகள் ராஜாங்கத்தாலடையும் நன்மைகளுக்கு அரசனே காரணமாதலால், அங்கிலேய ராஜ்ஜியத்திற்குட்பட்ட ஜனங்களனைவரும் '**ஈசன் இறைவனைக் காக்க**' என்று புகழ்ந்து பாடுகிறார்கள். எல்லாம் வல்ல கடவுளே! நமது அரசன் பல்லாண்டு பல்லாண்டாய் நிலைபெற்றுச் செங்கோல் செலுத்தி நம்மைப் பாதுகாக்க நீர் அருள்புரியவேண்டும் என்பதே 'ஈசன் இறைவனைக் காக்க' என்பதின் தாற்பரியம். இவ்விதமான வேண்டுதல் நமது தேசமெங்கும் பிரதிதினமும் தொனித்துக்கொண்டிருக்கின்றது. நாம் நமது களியாட்டுகளையும் கொண்டாட்டங்களையும் முடிக்கும்போது 'ஈசனே இறைவனைக் காத்தருள்' என்று பாடி முடிக்கின்றோம். ஆகையால் பிள்ளைகள் பின்வரும் ராஜவாழ்த்துப் பாடலைப் பாடம்பண்ணிச் சமயோசிதமாகப் பாடுதல் நலமாயிருக்கும்:—